## ஸத்திய தரிசனம்.

மஹாத்மா காந்தி ஜீவிய சரித்திரம்.

பாகம் 5. அத்தியாயம் 2.

### புனாவில் கோகலேயைக் காணல்.

நான் பம்பாய்க்கு வந்து சேர்ந்ததும், கவர்னர் என்னைப் பார்க்க விரும்புவதாகவும், நான் அவரைப் பேட்டி காண்பது பொருத்தமாகு மென்றும் கோகலே எனக்கு அறிவித்திருந்தாராதலின், நானும் கவர்னரைப் பார்த்தேன். அவர் என்னுடன் பல விஷயங்களைப் பற்றியும் பேசிய பின்னர் "நான் உங்களை ஒன்று கேட்டுக் கொள்ளுகிறேன். நீங்கள் சர்க்கார் சம்பந்தமாக ஏதேனும் திட்டம் அனுஷ்டிப்பதாக இருந்தால், அனுஷ்டிப்பதற்கு முன் என்னுடன் கலந்து யோசிக்க வேண்டு மென்று கேட்டுக் கொள்ளுகிறேன்" என்றார்.

அதற்கு நான் "இந்த வாக்குறுதியைக் கொடுப்பது எனக்கு சிரமமன்று. ஏனெனின் சத்தியாக்கிரகி என்னும் முறையில் நான் யாருடன் சம்மந்தப்பட வேண்டி யிருக்குமோ அவருடைய அபிப்பிராயத்தையும் தெரிந்துகொண்டு, கூடியவரையில் அவருடன் ஒப்ப நடந்து கொள்வதே எனது கடமையாகும். நான் இவ் விதியைத் தென்னாப்பிரிக்காவிலும் அனுஷ்டித்தேன்; இங்கேயும் அனுஷ்டிப்பே னென்பது திண்ணம்" என்று பதி லளித்தேன்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட கவர்னர் லார்டு வெல்லிங்டன் அளவற்ற சந்தோஷ மடைந்து "நீங்கள் எப்பொழுது வேண்டுமாயினும் என்னை வந்து பார்க்கலாம். என் சர்க்கார் வேண்டு மென்றே தவறு இழைக்காதபடி பார்த்துக் கொள்ளுங்கள்" என்று கூறினார். நானும் அந்த நம்பிக்கை தான் என்னிடம் அதிகம் குடி கொண்டிருக்கிற தென்று விடை யிறுத்தி விட்டுப் புனாவுக்குச் சென்றேன்.

புனாவில் என்ன என்ன நடந்தது என்பதைப் பற்றி யெல்லாம் கூறுவது அசாத்தியம். கோகலேயும் இந்திய ஊழியர் சங்கத்தாரும் என்னை மிக்க அபிமானத்துடன் நடத்தினார்கள். எனக்கு ஞாபக மிருக்கிற வரையில் என்ன நடந்த தென்றால், அவர் எல்லோரையும் ஒருங்கே கூட்டி என்னைச் சந்திக்கும்படி செய்தார். நான் அனைவருடனும் தாராளமாகப் பல விஷயங்களைப் பற்றியும் கலந்து பேசினேன்.

### இந்திய ஊழியர் சங்க உதவி.

இந்திய ஊழியர் சங்கத்தில் நான் சேர வேண்டு மென்று கோகலேயும் விரும்பினார்; எனக்கும் விருப்ப மிருந்தது. ஆனால் அச் சங்கம் செய்து வரும் வேலைகளுக்கும், எனது கொள்கைக்கும் வித்தியாச மிருந்தபடியால் நான் அதில் சேரக் கூடா தென்பது சங்க அங்கத்தினர்களின் அபிப்பிராயம். ஆனால் நான் என் கொள்கைகளில் பிடிவாத முள்ளவனாயினும், அவர்களுடைய செய்கைகளையும் கூட நான் பொறுத்துக் கொள்வேன் என்னும் நம்பிக்கை கோகலேய்க்கு மிகுதியாக இருந்தது.

அப்போது அவர், "சங்க அங்கத்தினர்கள் உங்களுடைய சமாதான எண்ணத்தை அறிய மாட்டார்கள். அவர்கள் தங்களுடைய கொள்கையில் பிடிவாத முள்ளவர்களாகவும், பிறரைப் பற்றிக் கவலை செலுத்ாதவர்களாகவும் இருக்கிறார்கள். அவர்களும் உங்களை ஏற்றுக் கொள்வார்களென்று நம்புகிறேன். அப்படி ஏற்றுக் கொள்ளாவிட்டாலும் அவர்களுக்கு உங்களிடம் அபிமான மேனும் மரியாதை யேனும் இல்லை யென்று நீங்கள் நினைக்கக் கூடாது. தாங்கள் அங்கத்தினராகச் சேர்ந்தாலும், சேரா விட்டாலும் நீங்களும் ஒரு மெம்பரென்றே நான் கருதுவேன்" என்று கூறினார்.

நான் என் அபிப்பிராயத்தை அவருக்கு அறிவித்தேன். அதாவது நான் இந்திய ஊழியர் சங்கத்தில் சேர்ந்தாலும், சேராவிட்டாலும் எனது போனிக்ஸ் குடும்பத்தாருடன் தங்குவதற்கு ஒரு ஆசிரமம் வேண்டு மென்றும், அந்த ஆசிரமம் எனது தாய் நாடாகிய கூர்ஜரத்திலேயே இருப்பது நல மென்றும், நான் கூர்ஜரத்தில் தொண்டு புரிவதன் மூலம் பாரத மாதாவுக்கே தொண்டு புரிய விரும்புவதாகவும் கூறினேன். அதை கோகலேயும் ஒப்புக் கொண்டார். மேலும், அவர், நான் என் இஷ்டப்படியே செய்யலா மென்றும், இந்திய ஊழியர் சங்க அங்கத்தினர்கள் என்ன அபிப்பிராயம் சொன்ன போதிலும், என் ஆசிரமத்துக்கு அவருடைய உதவியை நாடலா மென்றும் கூறினார்.

எனக்கு இதைக் கேட்டதும் அளவிலா மகிழ்ச்சியைத் தந்தது. பணம் வசூலிக்க வேண்டு மென்னும் கவலை என்னை விட்டு நீங்கியது. எனக்குக் கஷ்டம் நேர்ந்த போதெல்லாம் உதவி செய்ய ஒருவர் இருக்கிறார் என்னும் தைரியம் ஏற்பட்டது. அவ்வாறே காலஞ் சென்ற டாக்டர். தேவும், என் ஆசிரமத்துக்காக அந்த சங்கப் பணத்தி லிருந்து எவ்வளவு வேண்டு மானாலும் கொடுக்கலா மென்று கூறி விட்டார்.

பிறகு நான் சாந்தி நிகேதனம் புறப்படத் தயாரானேன். நான் புறப்பட்ட தினத்தன்று கோகலே ஒரு விருந்து நடத்தினார். எனக் கேற்ற பழம், கொட்டை முதலிய ஆகாரத்தையே தயார் செய்வதில் அதிக ஜாக்கிரதையாக இருந்தார். இந்த விருந்து அவருடைய அறைக்குச் சிறிது தூரத்தில் நடந்தது. அப்போது அவர் நடந்து வரக் கூடாத நிலையில் இருந்தும், என்னிட முள்ள அபிமானத்தால் விருந்து நடக்கும் இடத்துக்கு நடந்து வந்தார். ஆனால் அவர் நடந்து வந்த களைப்பினால் மூர்ச்சையானார். அவரைத் தூக்கிச் செல்ல வேண்டியதாயிற்று. அந்த விருந்தில் ஆகாரங்களை அருந்திக் கொண்டே நாங்களெல்லோரும் தாராளமாகப் பல விஷயங்களைப் பற்றியும் சம்பாஷித்தோம்.

---

### பெண்ணின் காதில் ஒருவகைப் பூச்சி.

### திருவாங்கூரில் ஒரு விநோதம்.

மத்திய திருவாங்கூரிலுள்ள தேவலக்கரை என்னு மிடத்தில் ஒருகிறிஸ்தவப் பெண்ணின் காதுகளி லிருந்து இரண்டு நாட்களுக்கு ஒரு முறை ஒருவகைப் பூச்சி வெளியே ஓடுகின்ற தென்றும், இப் பூச்சியை எடுத்து ஒரு சீசாவில் வைத்திருந்தால் 6 அல்லது 7 நாட்கள் வரை உயிரோ டிருப்பதாகவும், எவ்வளவோ வைத்திய சிகிச்சை செய்தும் இதை நிறுத்த முடியவில்லை யென்றும் தெரிகிறது. 18 வயதுள்ள இந்தப் பெண்ணுக்கு இதனால் உடலில் எவ்வித அசௌக்கியமும் ஏற்பட்டதாகத் தெரிய வில்லை,

---

குண மிலார் கேண்மை தனைக்
[கொள்ளுத லீனம்
பண மிலார் பெரு வாழ்வு
[பற்றுத லீனம்
மண மிலா திருக்கு மோர்
[மலர் முடித்த லீனம்
உண விலா வட்டத்தில்
[உரம்பேச லீனம்.

---

## வைதீகரின் வாழ்க்கை.

ஸ்ரீ அ. கு. அண்ணாமலை எழுதியது.

9-வது அத்தியாயம்.

### ஓர் மாணவன் மதி கிளத்தல்.

திரி காசிகளி லொரு காசியாகிய ஸ்ரீ காசியை அடைந்த வைதீகரை யொரு கல்லூரி மாணவன் சந்தித்தான்.

மாணவன்—சுவாமிகள் ! (இரு கை கூப்பி வணங்கினான்).

வைதீகர்—(ஒரு கரத்தை மாத்திரம் தூக்கிக் காட்டி விட்டு)என்ன விஷயம்?

மா—நான் ஒரு சாக்ஷி கை யெழுத்து வாங்குவதற்காகத் தங்களை எதிர் பார்த்தேன். தாங்கள் ஒரு கையைத் தூக்கி காண்பிக்கிறீர்களே. அதன் பொருளென்ன ?

வை—பையா ! இன்னொரு கையில் நெருப்பிருக்கிறது. இரு கைகளும் கூப்பி வணங்கினால் உன்னை எரித்து விடும்.

மா—அந்த நெருப்பு உங்கள் கையை மாத்திர மேன் எரிக்க வில்லை ? சரி; அது இருக்கட்டும். நான் மனஸ்தாபத்தால் வீட்டை விட்டு வெளியேறினேன். நானெரிந்தால் குற்ற மில்லை. இரு கையையும் கூப்புங்கள். என்ன நேர்கிற தென்று பார்ப்போம்.

வைதீகர் பக்காத் திருடனைப்போல் விழித்து மௌனஞ் சாதித்தார். மாணவன் பின்னால் கேலியாகப் பீடிக்கேனும் கொஞ்சம் நெருப்புத் தாரும். என்று கூறி வைதீகரின் கையைப் பிடித்தான். வைதீகர் வெடுக் கெனப் பறித்துக் கொண்டார்.

மாணவன்—கையில் நெருப் பில்லையே; குளிர்கிறதே. ஏனையா இவ்வளவு வயதாகியும் இப்படிப் பொய் சொல்கிறீர் ? ஒரு வேளை நெருப்பைக் கீழே போட்டு விட்டீர்களோ ?

வைதீகர் பொங்கிச் சீறி யெழுந்த முனியை ஒருவாறு அடக்கிக் கொண்டு "பாவமும், என் சாபமு முன்னை லேசில் விடாது. பிராமணனைத் தீண்டலாமா !" என்று முழங்கினார்.

மா—ஐயா ! தங்களைத் தொட்டதினால் தான் இனி ஸ்நானம் செய்ய வேண்டிய கஷ்டம் நேர்ந்தது. என் செய்வது ?

வைதீகர்—காந்தி தலை யெடுத்தார். தேசம் கெட்டது. உன்னை யெல்லா மிப்படிப் பேசும்படி விட்டது.

மாணவன்— வைதீகரே ! தங்களைப் போன்ற துவேஷ புத்திப் பிணி யுள்ளவர்களுக்கு வைத்தியராயும், சுய ஜாதிக்கு விலக்கு விதியும் தனி விதியு மேற் படுத்திக் கொண்ட சுய நலக் கொள்ளைக்காரர்களுக்குச் சாவு மணி யடிக்கக் கூடியவராயும், சுதந்திரம், சமத்துவம், சகோதரத்தும், சத்தியம், சாத்வீகம் முதலியவைகளுக்கு ஜெயப் பிரகாச மளிக்கக் கூடியவராயும், பாரத தேச மெனுங் கப்பலை அலைகள், துஷ்ட நீர் வாழ் பிராணிகள், காற்று முதலியவை போன்ற தீண்டாமை, ஒற்றுமை யின்மை, பிற நாட்டுப் பொருள்களை வாங்குதல் முதலிய இடர்களை விலக்கிச் சீராக ஓட்டிச் செல்லும் தலைவராயு முள்ளவர் ஸ்ரீ மகான் காந்தி. இங்கிலாந்து, ஜப்பான், ஜெர்மன், அமெரிக்கா, பிராஞ்சு முதலிய அந்நிய தேசங்கள் தங்கள் சாமான்களை யனுப்பி நமது இந்தியாவான கற்பக நாட்டிலுள்ள செல்வச் செழிப்பைப் பறித்துக் கொள்கின்றன. இராணுவம், உத்தியோகம், வரி முதலியவைகளா லின்னொரு பக்கம் பணம் உறிஞ்சப்படுகிறது. ஆனால் நீங்களோ ஜனங்களை ஏமாற்றி மோக்ஷத்திற்கு வழி காட்டுகிறே னென மோசத்திற்கு வழி கூட்டிப் பல கொள்ளைக்காரர்களைப் போல் நீங்களு மொரு கொள்ளைக்காரர்களாய்க் கொள்ளை யடிக்கிறீர்கள். தொட்டால் தீட் டென்றும், பாவ மென்றும் கூறுகிறீர்களே. தீட்டென்று லென்ன ? பிராமணர்களில் யோக்கிய மற்றவர்களும், பிராமணரல்லா தோரில் யோக்கியரும் கோடி கோடியா யுண்டு. அஃதறியாத நீர் தீட்டு தீட்டென ஏன் புலம்புகிறீர் ? திட்டுக்குப் பிறகன்றோ தீட்டு. திட்டு வீரானால் தீட்டுக் கிடைக்கும் நிச்சயமாய். திருவள்ளுவரை அறிவீரா ? அவரை விட உயர் பிராமணனுண்டா ? பூமி இம்மி யளவாவது வித்தியாசம் பாராட்டுகிறதா ? பரிதி வேற்றுமை பாராட்டுகிறதா ? இதை சிறிது நேரம் சிந்தித்துப் பாரும்.

வைதீகர் மௌனம் கலக நாஸ்தி யெனப் பேசாது வழி கூட மாணவனும் போய் விட்டான். வைதீகர் காசிக்கு வந்தும் கர்மம் தொலைய வில்லையே என எண்ணிக் கொண்டு அந்தோ ! ஈசா ! ஆட்டி வைத்துக் கூத்துப் பார்க்கின் றனையோ ? வீட்டிலென் சொல்லுக்கு மதிப்புப் போச்சு. வைத்தியரிடம் என் பல் போச்சு. எனக்குக் கெட்ட காலம் உதித்தாச்சு. நிழல் போல் துன்பமும், தொல்லையும் தொடர்ந்து வருகின்றன. அம்மம்மா! உலகம் பொல்லாதது. முன்னால் போனால் முட்டு; பின்னால் சென்றால் உதை யென்ற வித மிருக்கிறது. போகப் போகப் பெரிதா யிருக்கிறது. காசி விஸ்வேசா ! உன்னை அண்டியும் என் வினை விடே னென்கிறதே எனப் புலம்பி இன்னும் சில தினங்களில் சொந்த ஊருக்குப் புறப்பட வேண்டு மெனத் தீர்மானித்துக் கொண்டார்.

---

## மதிப்புரைகள்.

### "சத்திய மித்திரன்"

இப் பத்திரிகை யொன்று கிடைக்கப் பெற்றோம். இதுவாரமிரு முறைபுதனி சனியாக வெளி யீடாகும் ஓர் தேசியப் பத்திரிகை. இது கொழும்பு நகரினின்றும் ஸ்ரீமான் எச். நெல்லையா அவர்களின் பத்தி ராதிபத்தியத்தின் கீழ் வெளி வந்துலவுகிறது. இது ஆரம்பமாகி 3 வருடத்திற்கு மேலாகிறது. தன் பெயருக்கேற்ப உண்மைக் குழைப்பதில் சற்றும் பின் வாங்காததாகவே தெரிகிறது. இது நீடு வாழ்க. பக்கங்கள் 8 கொண்டது. தேவையுள்ளோர் "சத்திய மித்திரன் ஆபீஸ், 90. 2-வது குறுக்குத் தெரு, கொழும்பு" என்ற விலாசத்திற் கெழுதவும்.

ஃ ஃ

### "விவேகானந்தம்".

இந் நாமம் புனைந்த மாதாந்தப் பத்திரிகையின் 4-ம் வருட 1, 2 சஞ்சிகைகள் எமது பார்வைக்கு வரப்பெற்றோம். இது சென்னையிலிருந்து வெளி யிடப் பெறுகிறது. புஸ்தக ரூபத்தில் 50 பக்கங்கள் கொண்டது. இது தன் பெயருக் கேற்ப மக்களுக்கு விவேகத்தையும், ஆனந்தத்தையும் ஊட்டுமாப் போல் பல கட்டுரைகள் பொறிக்கப் பெற்றிருக்கின்றன. வருடச் சந்தா உள் நாட்டுக்கு ரூ 1-0-0ம், வெளி நாடுகளுக்கு ரூபாய் 1—4—0 மாகும். தேவை யுள்ளோர் "விவேகானந்தம் ஆபீஸ், 145. தங்க சாலை வீதி, சென்னை" என்ற விலாசத்திற் கெழுதிப் பெறவும். இப் பத்திரிகை பல்லாண்டு வாழ்க.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## பார்ப்பனரல்லாத இளைஞர் மகா நாடு.

பார்ப்பனரல்லாதார் முன்னேற்றத்தின் பொருட்டு நிலை நிறுத்தப்பட்டிருக்கிற பார்ப்பனரல்லாத இளைஞர் கூட்டத்தின் மதுரை—இராமநாதபுரம் ஜில்லா இளைஞர் முதல் மகாநாடு நாளிது வருடம் மேமாதம் 19, 20 தேதிகளில் மதுரையில் சென்னை உயர் திருவாளர். ராவ்பகதூர் டாக்டர் வி. நடேசமுதலியார் அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறும். உயர்வு, தாழ்வு கருதாத நமது தமிழ்மக்களிடை ஒற்றுமை ஓங்குமாறும், ஒருவருக்கொருவர் அன்பு மேலிட்டுத் தொண்டுபுரியுமாறும், கல்வி அறிவு பெருகுமாறும், உடல் நலத்தைப் போற்றுமாறும் இம் முதல் மகாநாடு சிறப்பாக நடைபெற வேண்டியிருப்பதால் தமிழ் மக்களொவ்வொருவரும் ஊக்கங்கொண்டெழுந்து தங்கள் தங்களாலியன்ற அளவு மன மொழி மெய்யால் உதவி புரியுமாறு வேண்டுகிறோம்.

எஸ். இராமச்சந்திரன் சேர்வை,

வரவேற்புக்கழகத்தலைவர்.

### அறிக்கை நிர் 1.

இம்மகாநாடு மதுரையில் மேலமாசி வீதி தகரக்கொட்டகையில் நாளிது மேமீ 19, 20உ சனி, ஞாயிறு கிழமைகளில் நடைபெறும்.

### அறிக்கை நிர் 2.

இம்மகாநாட்டு வரவேற்புக் கழகத் தலைவராக சிவகங்கை எஸ்டேட் வக்கீலும் தாலுகா போர்டு பிரசிடெண்டும் இராமநாதபுரம் ஜில்லா தேவஸ்தான கமிட்டி உபதலைவரும் ஜில்லா கல்விச் சபை அங்கத்தவருமான திரு. எஸ். இராமச்சந்திரன் சேர்வை அவர்கள் தெரிந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள்.

### அறிக்கை நிர் 3.

மகாநாட்டின் தலைவராக சென்னை நகராட்சிக் கழக உறுப்பினரும்திராவிட சங்க ஸ்தாபகருமாகிய ராவ்பகதூர் டாக்டர் வி. நடேசமுதலியாரவர்கள் எல். அண்டு எப். எஸ். தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார்கள்.

### அறிக்கை நிர் 4.

வரவேற்புக்கழக உறுப்பினர் கட்டணம் ரூ 2 ஆகவும் பிரதிநிதி கட்டணம் அணா 8 ஆகவும் பார்வையாளர் விஸிட்டர்கட்டணம் அணா 4 ஆகவும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. பெண்மக்களுக்கும் ஆதிதிராவிட சகோதரர் கட்கும் யாதொரு கட்டணமும் கிடையாது.

### அறிக்கை நிர் 5.

வெளியூர் பிரதிநிதிகளுக்கு மகாநாட்டில் இடவசதியும் ஆகார வசதியும் இலவசமாகக் கொடுக்கப்படும். (விஸிட்டர்களுக்குக் கிடையாது.) படுக்கைகள் அவரவர்களே கொண்டுவரும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### அறிக்கை நிர் 6.

மகாநாட்டின் தொண்டர் படைத் தலைவராக திரு. வி. அழகப்பன் பி. ஏ. பி. எல். வக்கீல் (மதுரை) தெரிந்தெடுக்கப்பட்டிருக்கிறார். எல்லா இளைஞர்களும் அவர்களிடம் சென்று தொண்டர்களாகப்பதிவு செய்துகொள்ளும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

### அறிக்கை நிர் 7.

கதர் பொருட்காட்சி ஒன்று வைக்கப்படும். "குமரன்" பத்திரிகாசிரியர் திரு. சொ. முருகப்பசெட்டியாரவர்கள் அதைத் திறந்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

### அறிக்கை நிர் 8.

வர்த்தகப்பொருட்காட்சி யொன்றும் வைக்கப்படும். "நாடார் குல மித்திரன்" பத்திராதிபர் சூ. ஆ. முத்து நாடாரவர்கள் அதைத்திறந்து வைக்குமாறு கேட்டுக்கொள்ளப் பட்டிருக்கிறார்கள்.

### அறிக்கை நிர் 9.

20உ ஞாயிற்றுக்கிழமை இரவு சகோதரத்துவ சமத்துவ சமபந்தி போஜனமொன்று பல திறப்பட்ட வகுப்பார் கடங்கிய சுயம்பாகிகளால் தயாரிக்கப்பட்ட வேற்றுமையற்ற உண்டிவிழா நடைபெறும். அதற்கு டிக்கட் பெற்றவர்கள் அனுமதிக்கப்படுவர். அது போழ்து மதுரை பார்ப்பனரல்லாதார் இளைஞர் சங்கத்தார், சிலம்பம், சர்க்கஸ், பார்விளையாட்டு கடங்கிய தேகாப்பியாசங்களைச்செய்து காண்பிப்பார்கள்.

### அறிக்கை நிர் 10.

வரவேற்புக்கழக உப தலைவர்களாக மதுரை முனிஸிபல் கௌன்சிலர் கா. ம. அலாவுதின் ராவுத்தர் பகதூர், பி. ஜி. தாமஸ், பி. ரெங்கசாமி நாயுடுகாரு வக்கீல், ஆர். ஜி. நல்லகுத்தாலம்பிள்ளை அவர்கள், ஸ்ரீவில்லிபுத்தூர் தங்கமணி நாடாரவர்கள் என். சுருளிப்பண்டிதர் அவர்கள், பிச்சமுத்து கோனாரவர்கள்,வையாபுரி அம்பலகாரர் அவர்கள், கருமுத்து சிவலிங்கம் செட்டியாரவர்கள், சொ. முருகப்பசெட்டியாரவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

### அறிக்கை நிர் 11.

மகாநாட்டுக்கு அனுப்பவேண்டிய தீர்மானங்களை வரவேற்புக் கழகத்தலைவருக்கு 14உக்குள் வந்து சேரும்படியாக சிவகங்கைக்கு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

### அறிக்கை நிர் 12.

ஸ்ரீமான்களானவைக்கம்வீரர், அழகர்சாமிநாயுடு, லிங்கம், கண்ணப்பர், இராமநாதன் ஆர்யா முதலிய பல தலைவர்கள் விஜயஞ் செய்வார்கள். அனைவரும் திரளாக வருக.

அம்பலம் நல்லமணி பி. ஏ. பி. எல்.

விளம்பர ஆபீஸர்.

---

பிராமண ரல்லாதார் சமுக மேன்மை அச் சமுக வாலிபர்களைப் பொறுத்திருக்கிறது. வாலிபர்களே! ஊக்கங் காட்டுங்கள்.

---

## எனது அனுதாபம்.

திருநல்லூர் வதிந்த திருமேனியே! நின் திரு மேனி மறைந்த செய்தி நம் மித்திரன் மூலமறிந்து மிகு துயர் கொண்டேன். கண்ணீ ருகுத்தேன். கலங்கினே னுள்ளம். கரையிலாக் கவலையி லாழ்ந்தேன். கடவுளே! இது வுன் கருணையா வெனக் கதறினேன்.

கத ரபிமானக் கண்ணியா! மூவாசை யொழித்த மூதறிஞா! நின் முகார விந்தம் காண்ப தெப்போ? அருப்புக்கோட்டையில் அடுத்துக் கூடும் நம் 12-வது மகாநாட்டில் அரும் பெரும் ஊழியம் செய்து அனைவரையும் மகிழ்விக்கும் ஆற்றல் நிறைந்த அன்பா! எங் குற்றனை?

ஜீவகாருண்யப் பிரசாரம் சீக்கிரம் நிறை வேறுமற் றடுத்துச் செய்த எதிர்ப் பிரசாரத்தை ஈசனிட மறிவித்து இனிது நிறை வேற்றி வைப்பான் வேண்டி எழுந்தனையோ விண்ணுலகம்?

தீண்டாமைக் குறை விடமான திருவிதாங்கூரி லெழுந்த வைக்கம் சத்தியாக்கிரகத்தில் சமர்த்துடன் சென் றுழைத்து ஜெயக் கொடி நாட்டிய சற்குண மணியே! நின் பிரிவால் தயங்கும் என் போன்ற இளைஞர்கள் ஒருங்கு சேர்ந்து நின் னூழிய ஞாபகார்த்த சின்னம் நிலை நாட்டுவார்களாக.

பொது நல சேவைக் கிடையூறென வெண்ணி இல்லறத்தையும், பூரண உணவையும் புறக்கணித்துப் புனிதமுடன் அந் நெறி வழுவாது நின் றுழைத்த வாலிப சிங்கமே! நின் பூதவுடம் பழிந்தாலும் நின் புக ழுடம்பு என்னும் இந் நில வுலகில் நின் றுலவு மென்பதனை யுன்னியே ஒருவாறு தெளிந்தேன்.

எனது அருமை நாதர் அவர்களின் அகால மரணத்தால் ஆறாத் துயரி லாழ்ந்திருக்கும் அன்னார் குடும்பத்தாரனைவர்க்கும் எனது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அவர்கட்கு ஆறுத லளிக்கவும், அன்னாரின் ஆத்மா சாந்தி யடையும் ஆண்டவனை அடி பணிந்து பிரார்த்திக்கிறேன்.

கிருஷ்ணப்பெருமாள்,

தென் திருவிதாங்கூர்.

---

## கோவில் கொடுமை.

("சுதேசபரிபாலினி" சொல்வது.)

வைதீக மனப்பான்மையுடையவர்கள் இருக்கும்வரை நம் ஹிந்துக்களிடையே சமூக முன்னேற்றமேற்படுத்த முயலுவது கடினமான காரியம். இவர்கள் தமது புத்திப் போக்கை மாற்றும்வரை சமூகாபிமானிகள் எத்தகைய முயற்சி செய்தபோதிலும் அது பயன் படாதே போய்விடும். நம்நாட்டில் நமது சமூகத்தினரிடையே பால்ய விவாகம், தீண்டாமை, ஜாதி வித்தியாசம் முதலிய பல தீமைகளிருந்து வருகின்றன வென்பதை அனைவரும் உணருவர். இவைகளை ஒழிப்பதற்கே சமூகாபிமானிகளும் தேசியத் தலைவர்களும் அரும் பெரும் பாடுபட்டுவருகின்றனர். ஆனால் வைதீக மனப்பான்மையுடையவர்கள் இத்தகைய பழக்கங்கள் ஆதிகாலத்திலிருந்து நம் முன்னோர்களால் அனுசரிக்கப்பட்டு வருவதால் அவற்றை ஒழிப்பது சரியான முறையாகமாட்டாதென்று வற்புறுத்திப் போராட வந்துவிடுகின்றனர். பெண்களின் விவாக சம்மத வயதை உயர்த்துவதற்கும் மற்றும் ஹிந்து ஸ்திரீ சமூகத்தின் கண்ணுள்ள ஊழல்களை அறவே ஒழிப்பதற்கும் மத்திய சட்டசபையில் சட்டங்கள் கொண்டு வரப்பட்டபொழுது இவற்றை வைதீக மனப்பான்மையுடையவர்கள் எவ்வாறு எதிர்த்தனரென்பது கண்கூடு. இத்தகைய வைதீக மனப்பான்மையுடையவர்கள் சிறிதேனும் விட்டுக்கொடுக்காமல் கல்மனம் உடையவர்களாயிருப்பதுபற்றியே அவ்வைதீக முறைகளை தயவு தாட்சண்யமின்றி உடைத்தெறிய பாடுபடுவது தேசீய கடமையாகுமென பன்முறை வற்புறுத்தியுள்ளோம். சகலருக்கும் பொதுவான உரிமைகளை ஒரு பகுதியினர் கைப்பற்றிக்கொண்டு பிறருக்கு அவ்வுரிமை கிடையாதெனக் கூறுபவர்கள் யாவராலும் இகழப்படுவர். காலதேச வர்த்தமானங்களையும் நியதியையும் உத்தேசித்துசகல ஹிந்துக்களுக்கும் ஆலய உரிமை வழங்கப்பட வேண்டியது முற்றிலும் அவசியமானதென்பதை முற்போக்கில் ஈடுபட்ட அனைவரும் ஒப்புக்கொள்வர். ஆனால் மனிதர்களிடையே தெய்வீக உணர்ச்சி உண்டுபண்ண வேண்டிய ஆலயங்களின் நிலைமை இப்பொழுது நகைப்புக்கிடமாக இருக்கிறது. எல்லாம்வல்ல இறைவன் சகலரையும் சரிசமானமாகவே நோக்கி ஆதரிக்க முற்பட்டுள்ளாரென்பது முற்றிலும் பொய் என்று நிரூபித்துக் காட்டப்பட்டுவருகிறது. உலகம்போற்றும் மகாத்மாகாந்தியடிகள் கன்னியாகுமரி கோவிலுக்குள் செல்லக்கூடாதெனத் தடுக்கப்பட்டதும், சைவசீலரான ஸர். ராமநாதன் மதுரைக் கோயிலுக்குள் போகக்கூடாதெனத் தடுக்கப்பட்டதும் நேயர்கள் அறிந்ததே. தற்சமயம் ஹிந்து சமய விரோத உணர்ச்சிகளை அறவே ஒழித்து அதை சீர்திருத்த அரும் பெரும் பாடுபட்டு வரும் லாலா லஜபதிராயை திருவனந்தபுரம் பத்மநாபசுவாமி கோவிலுக்குள் போகக்கூடாதென்று வைதீகர்கள் தடுத்துவிட்டார்களாம். என்னே வைதீகரின் மனப்பான்மை! நம் நாட்டில் முற்காலத்திலிருந்த நாகரீகத்தையும் மதக்கோட்பாடுகளையும் விளக்கிக் காட்டவல்ல கோவில்களை சரித்திர புத்தியுடன் பார்ப்பதற்கும் ஹிந்து சமூகத்தினரில் உயர்வு தாழ்வைக் கற்பிக்கும் நோக்குடனும் ஒரு பகுதியினரை சதா கேவலமாக நடத்தக்கூடிய முறையில் கோயில்கள் நிர்வகிக்கப் படுவதைத் தடுப்பதற்கும் பல பெரியோர்கள் கோவிலுக்கு விஜயம் செய்கின்றனர். அத்தகைய நோக்கத்துடன் லாலா லஜபதிராயும் விஜயம் செய்துள்ளார். மலையாள வைதீக ஹிந்துக்கள் இதர தேச வைதீக ஹிந்துக்களைவிட மூடக் கொள்கைகள் நிரம்பியுள்ளார்களாதலால் அவர்கள் இவ்வாறு செய்துள்ளனர். திருவனந்தபுரம் ஹிந்துக்கள் லாலாவுக்கு விளைவித்த அவமானம் சம தர்மத்தில் பற்றிக்கொண்ட எல்லா ஹிந்துக்களுக்கும் அவமானம் விளைவிப்பது போலாகும். ஹிந்து சமூகமும் ஹிந்துமத தர்மமும் சிறப்புற்று நம்நாடு நன்னிலையடைய வேண்டுமானால் சர்வஜன ஆலய உரிமை ஏற்பட்டு தீண்டாமை, பால்ய விவாகம் முதலிய தீமைகளை நம் ஹிந்துசமூகத்தினின்று அடியோடு ஒழித்தல் வேண்டுவதுடன் வைதீகர்களுக்குப் போதிய படிப்பினை அளிக்க சமூகாபிமானிகள் முற்படுதல் வேண்டும். அப்பொழுதே நம்நாடு க்ஷேமமுறும். வைதீக மனப்பான்மையுடையவர்கள் தமது பிடிவாதச் செயல்களால் எவ்வளவு நன்மதிப்பை இழந்து விடுகின்றனரென்பதையும் அவர்கள் உணருதல் வேண்டும்.

---

## கற்பு.

ஆதிமத்யாந்த ரஹிதனாகிய கோலாகலனின் அருட் சக்தி யாற்றோன்றிய, இவ்வுலக சராசரங்களுக்குள் வாழ்கின்ற சர்வ ஜீவான்மாக்கட் குள்ளும் மானுஷிக ஜென்மமே மேம்பாடுடைய தென்பது கொள்ளத் தக்கது. எனிச் ஜென்மம் பெருமையுடைத் தென விளைவின் ஆறு வகையறிவு இவ் வோர் ஜன்மத்திற்கு மட்டும் வாய்ந்தது என வறிக. மற்றவை யெல்லாம் தமது பூர்வ கன்மானு சாரங்கட்குத் தகுதியாக கூடியும் குறைந்தது மாகிய அறிவையுடைய சடலம் பெற்றன வென்பது சாஸ்திரத்தின் துணிபு. ஆறுவது அறிவு என்பது கடவுளைப் பற்றி யறியும் அறிவாம். மனிதர் கட் குள்ளும் தெய்வ ஞான மற்றவர் மனுஷ ரூபமாகத் தோன்றினும், பகுத்தறி வில்லாத மிருகங்களே யாவர். எனவே தெய்வ ஞானந் திகழ்ந்து தீயவை யகற்றி மனிதத் தன்மை பொதிந்து தண்ணளி சார்ந்த அவ் வண்ணலின் மலர்ப் பாதத்தை அடைய வேண்டுவதே மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவர் மாட்டு முள்ள கடமை. இக் கடமையாற்றற் கொப்பு நெறி கற்பு நெறியே எனக் கழறுவாம்.

யாம், கற்பு மணம் நம்மை விட்டு அகன்று விடாமல் அதைப் பாது காத்தற்றலை. பாது காத்தல் எவ்வா றென்பரோ? முயற்சி மேலீடு கொண்டு தத் தம்மாலான மட்டும் கர்மேந்திரிய பஞ்சேந்திரியங்களின் சேஷ்டைகளை வைராக்கியத்தா லடக்கி, வெகு நிதானத்துடன்நின்று காக்க வேண்டும். இச் செந் நெறி மலரை ஆடவர் மகளிர் என்ற இரு பாலர்களும் எவ்வாற்றானும் உறுதியோடு சதாவும் தம திருதயத்தி லணிந்து கொள்ள வேண்டும்.

கற் பென்பது மனைவி கணவற் காற்றும் கடமை வழியா மென்பதை மட்டும் கிளைவிற் போட்டு, பெண்டிர்க் கன்றோ கற்பு? ஆடவர்க்கு மென்பது விந்தை யென்று சிலர் பிதற்றல் காணலாம். இக் கூற்று பொருத்த மற்றதெனக் கூறுவோம். இது நியாயத்தின் முன்னில்லாது. ஒரே மனித வர்க்கத்தில் பெண்ணிற் கெனவும், ஆணிற் கெனவும் தனித் தனி நியாயங்கள் கொள்ளல் தேவ சம்மதமாகாது. எனவே பெண் ஆண் இரு பாலருமே இந் நெறி செல்ல வேண்டியதாகும்.

கேவலம் க்ஷணம் எனும் மாமிச இச்சையால் வரும் கேட்டை என் னென் றுரைப்பது! மின்னலைப் போல் தீடீரெனத் தோன்றி தீடீரென மறைந்து போகும் ரூபலா வண்ணியத்தில் மாய்கை கொண்டு அதைப் பெரிதும் போற்றித் திரிபவர், விலங்கினும் கடையோரான தன்மையராகி, லச்சைப்பட்டு கற் பென்னும் மலர் வாடவும், கடின வியாதிகள் நாடவும், சஜ்ஜனர் உறவு நீங்கவும், துர்ச்சனர் உறவு ஓங்கவும், இன்பங்கள் ஏகவும், துன்பங்கள் சேரவும், செல்வம் வந்த வழிச் செல்லவும், திரு மகள் அருள் போகவும், தினே தினே சஞ்சலம் சூழலாகி உழல்வர். ஆதலால் சகலத்தினும் சிறப்புப் பொருந்திய கற் பென்னும் சிறந்த கடின விரதத்தைக் கைக் கொண்டு மானிட ஜன்ம சாபல்யமாக அதன் வழி யொழுகி சச்சிதானந்தமாகிய கைவல்ய பதவியைப் பெற முயற்சிப்போமாக எனப் பிரகாசபுரம் ஐக்ய சங்க வாசக சாலையின் ஓர் மெம்பர் எழுதுகிறார்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection



சாதி குலம் பிறப்பிறப்புப் பந்த முத்தி
அருவுருவத் தன்மை நாமம்
ஏது மின்றி யெப்பொருட்கு மெவ்விட
த்தும் பிரிவற நின்றியக்கஞ் செய்யுஞ்
சோதியை மாத்ரு வெளியைமனதவிழ
நிறைவான துரிய வாழ்வைத்
தீதில் பரமாம் பொருளைத் திருவருளே
நினைவாகச் சிந்தை செய்வாம்.

---

# நாடார்குலமித்திரன்

விபவ ௵ வைகாசி மீ ௧௳

---

## நமது 12-வது மகாநாடு.

**2**

நாம் சென்ற வாரத்தில் தெரிவித்த பிரகாரம் இன்று நடந்த மகாநாட்டின் உபசாரணைக் கமிட்டிக் கூட்டத்தில் சங்கத்தின் 110-வது உப விதிப்படி டாக்டர். சுப்பராயன், அல்லது திவான்பகதூர் கிருஷ்ண நாயர் இருவர்களி லொருவரைக் கொண்டு முதல் நாள் மகாநாட்டைத் திறந்து வைக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்வதாக ஏக மனதுடன் தீர்மானிக்கப் பெற்றிருக்கிறது. யாரால் எந்த மாதம், எந்தத் தேதியில் திறந்து வைக்கப் பெறு மென்பதைக் கூடிய சீக்கிரம் தெரிவிக்கக் கூடும்.

இன்று நடந்த கூட்டத்திற்கு வெளி யூர்களிலிருந்து வந்திருந்த எல்லாக் கனவான்களும் மகாநாடு இனிது நடை பெற எல்லா ஒத்தாசைகளும் செய்வதாக வாக்களித்து உற்சாகப் படுத்தி யிருக்கின்றார்கள். அனேக ஊர்களிலிருந்து வந்த கடிதங்களும் மிக உற்சாகத்தைக் கொடுக்கத் தக்கதாகவே இருக்கின்றன. உபசரணைக் கமிட்டியாரும் மகாநாடு கூடுவதற்கு மிக விசாலமான ஒரு காலி நிலத்தில் நாற்புறமும் மதில் எழுப்பிப்பிரமாண்டமான கொட்டகை செப்பனிடுவதற்குத் துரிதமான ஏற்பாடுகள் செய்து கொண்டிருக்கிறார்கள். கூடிய சீக்கிரம் வெளி யூர்களுக்கு டிக்கெட்டுகள் விற்பனைக்கு ஏற்பாடு செய்யக் கூடும்.

முன்னொரு காலத்தில் நமது பாண்டிய மன்னர்கள் ஆண்டு வந்தார்களென்பதற்குப் பல சின்னங்கள்காணக்கூடியதாகவும்,மிகப் புராதன நகரங்களி லொன்றாகவும் விளங்கா நின்ற இவ் வருப்புக் கோட்டையில் நடக்கும் மகாநாட்டின் சிறப்பையும், செய்யுந் தீர்மானங்களையும் கண்டு, கேட்டு இன்புற நாலா திசைகளிலுள்ள நாடார்களும் வருவார்களென்று நம்புகிறோம். வெகு நாட்களாக [illegible] இருக்கும் சமூக வேலையை வெகு துரிதப் படுத்துவதற்கு நாடார் குல அபிமானிக ளனைவோர்களும் வருவார்களென்றே எதிர் பார்க்கப்படுகிறது. வாலிப நாடார் மகாநாடும் நடக்க விருப்பதாலும், அதற்கு சமாச சன்மார்க்கத்திற் றலை சிறந்து விளங்கும் ஒரு பெரியாரைத் தலைமை வகிக்க அழைக்கப் பேர்வதாலும் இரு மகாநாடுகளும் வெகு சிறப்பாய் நடக்கு மென்று நம்புகின்றோம்.

---

## மதுரையில் லாலாஜீ சொன்ன தென்ன?

பாஞ்சாலத்தின் முடி சூடா மன்னர் லாலா லஜபதிராய் சின்னாட்களுக்கு முன் தென்னாட்டின் நிலைமையை அறிந்து கொள்ளும் பொருட்டு கன்னியா குமரி வரையும் போய்த் திரும்பினா ரென்பது யாவரும் அறிந்த விஷயம். அவர் ஒவ்வோரிடத்திலும் அரசியலைப் பற்றியும், சமுதாய முன்னேற்றத்தைப் பற்றியும், வெளியிட்ட அபிப்பிராயங்களையும் நன்குணர்ந்திருக்கலாம். உலக மெல்லாம் உத்தம தேச பக்தரெனப் போற்றும் அவ (லாலாஜீ) ரைத் திருவனந்தபுரம் கோயி லுள் பிரவேசிக்க விடாமற் றடுத்த பின்னர் மதுரையில் லாலாஜீ சொன்ன தென்ன என்பதை மட்டும் ஈண்டு குறிப்பிடுகின்றோம். ஏனென்றால் வட ஜில்லாக்கள் பல வற்றில் வாலிப ரியக்கந் தோன்றி சுயமரியாதை முழக்கம் முழங்கிக் கொண்டிருப்பதாலும், இருள் சூழ்ந்த தென் மூன்று ஜில்லாக்களில் இன்னும் சுயமரியாதை முழக்கம் காண வில்லை யென்பதாலும், மதுரையில் லாலாஜீ தம் முள்ளக் கருத்தைத் தெள்ளிதி னுணர்த்தி யிருப்பதாலும், மதுரையில் பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடு கூடுஞ் சமயமா யிருப்பதாலும் லாலாஜீ சொன்னதைப் பார்ப்பனரல்லாத இளைஞர்கள் அதிகம் கவனிக்க வேண்டிய திருப்பதால் அதை ஞாபகப் படுத்துகின்றோம். அதாவது:—

இம் மாகாணத்தில் பார்ப்பனரல்லாதாருக்கும் பார்ப்பனருக்கும் ஒரு சண்டை நடந்து கொண்டிருக்கின்றது. அதைப் பற்றி நான் எதுவும் கூற இயலாது. ஆனால் அதைப் பற்றி சில சொல்ல விரும்புகின்றேன். அரசியலில் போன்றவாறு சமுதாயத்திலும் ஜன நாயகம் என்பதை அடிப்படையாய்க் கொண்டிருக்க வேண்டும். யாரும் எந்த மதத்தையும் பின் பற்றலாம். ஆனால் சமுதாயத்தில் மட்டும் வித்தியாசம் வேற்றுமைகள் இருக்கக் கூடாது. ஒரு சமூகத்திற்கும் மற்றொரு சமூகத்திற்கும் மத்தியில் தடைச் சுவர்கள் எதுவும் கட்டக் கூடாது. மத வித்தியாசங்களை இச் சுவர்கள் எழுப்பு மென நீங்கள் நம்பினால், அது மிகவும் வருந்தத்தக்க தேயாகும். இவ்விதம் நம்புவது ஜன நாயகம் என்பதை நீங்கள் கிஞ்சித்தேனும் அறியாதவர்கள் என்று நினைக்க இடம் கொடுக்கும். சமுதாய விடயங்களில் இவ் வேற்றுமைகளைப் பற்றி சென்னை மாகாணத்திலும் முக்கியமாய் மலையாளத்திலும் அதிகமாய் வருந்தப்படுகின்றது. பார்ப்பன ஆதிக்கம் அதிகமா யிருக்கின்றது. அதனால் ஒரு பார்ப்பான் பார்ப்பனரல்லாதார் ஒருவரைத் தொட்டால், அவன் தான் சாப்பிடும் முன் குளிக்க வேண்டுமென்றிருக்கின்றது. பார்ப்பனரல்லாதாருக்கே அவ்விதம் நடக்கும் போது தீண்டப்படாதாரைப் பற்றிக் கேட்க வேண்டியதே இல்லை. அவர்கள் நிலை மிகவும் கேவலமாய் இருக்கின்றது. தாழ்ந்த வகுப்பினர் எவரும் ஒரு பார்ப்பனருக்கு அருகில் வரக் கூடாது; மற்றும் ஒரு பார்ப்பனனின் நிழலைக் கூட தொடவும் கூடாது என்றிருக்கின்றது. இவ்விதம் தீண்டாதார் அசுத்தமாய் இருக்கின்றார்கள் என்பதற்காகச் செய்யப்பட வில்லை. அவர்களும் அவர்கள் இருப்பிடங்களும் பரிசுத்தமாய் இருப்பதை நான் பார்த்தேன். ஆனால் அது பரம்பரை வழக்கத்தை ஒட்டியே செய்யப்படுகின்றது. தீண்டப்படாதார் என எவரும் கிடையாது. நீங்கள் இவ்விதமான வேற்றுமைகளை விடாது ஒரு பக்கம் அயல் நாட்டினருடனும் மற்றொரு பக்கம் உங்களுக்குள்ளும் சண்டை போட்டுக் கொண்டிருந்தால், சுயேச்சைக்குப் போரிடுவது கஷ்டமாய் முடியும். செல்வ நிலையில் எல்லோரும் முன்னேறா விடில், நீங்கள் ஜன நாயக ஆட்சி பெற யோக்கியதை யுடையவர்களாய் ஆக மாட்டீர்கள். இவ்விதமாக நாடு முன்னேறாமைக்குக் காரணம் பார்ப்பனரே யாவர். ஆனால் பார்ப்பனல்லாதாரிலும் சிலர் இத் தாழ்ந்த வகுப் பினரைப் பார்ப்பனர்களைப் போன்றே நடத்துகிறார்கள். தீண்டாமையையும், அணுகாமையையும், மற்றும் சமுதாயக் கொடுமைகளையும் நீக்கும்படி உங்களைக் கேட்டுக் கொள்கின்றேன். அந்த அநீதிகளினாற்றான் ஐயப்பாடுகளும், ஆபத்துக்களும் நேரிடுகின்றன.

மேலே கண்ட லாலாஜீ பொன்னுரையில் பார்ப்பனரல்லாதாருக்குஞ் சூடு கொடுத்திருப்பதை நன்கு கவனிக்க வேண்டும். நாடு முன்னேறாததற்குப் பார்ப்பனரே காரணமாயினும், சற்றும் மானம், வெட்க மில்லாத கோடரிக் காம்புகளாய்ப் பார்ப்பனருக்கு ஒத்துத் தாளம் போட்டதினாலும், போடுவதினாலும் பார்ப்பனர் இலகுவில் வெற்றி பெற்று விடுகிறார்கள் என்பதை லாலாஜீ சற்றும் மறை முகமாய்ச் சொல்ல வில்லை யென்பதை பார்ப்பனரல்லாத வாலிபர்கள் தீர்க்காலோசனை செய்து பார்க்க வேண்டும்.

மொத்தம் ஜனத் தொகையில் பார்ப்பனர்கள் சுமார் பதின் மூன்று லட்சமும், சொச்சமுமென்றே சொல்லப்படுகிறது. இவர்களுக்கு பெருமாள் கோயில் ரிஷபம் போல் தலையாட்டி அவர்கள் பாதம் வருடித்திரியாமல் நாம் யார்? என்பதை அறிந்து எல்லாப் பார்ப்பனரல்லாதாரும் தெளிந்து விட்டால், பார்ப்பனர் கொட்டம் அடங்கிவிடு மென்பதிற் சந்தேக மில்லை. பார்ப்பனரல்லாதார் கருத்துக்கு அவர்கள் இணங்கியும் வந்து விடக் கூடும். அதற்கு மேல் அவர்கள் என்ன செய்ய முடியும்? உதாரணமாக மதுரைக் கோயிலை எடுத்துக் கொள்வோம். கோயில் மூலஸ்தானத்தில் ஒரு பார்ப்பன ரிருக்கிறார். கோபுர வாசலி லிருந்து மூலஸ்தானம் வரையும் தொண்ணூற்றொன்பது பார்ப்பனரல்லாதவர்க ளிருக்கின்றார்கள். இந்த 99 பார்ப்பனரல்லாதார்களும் தாழ்த்தப்பட்டவர்களைக் கோயிலுள் விடச் சம்மதித்தால் ஒரு பார்ப்பனர் அழைத்துக் கொள்வாரே யன்றி வேறொன்றுஞ் செய்யவே முடியாது என்பதை மதுரைப் பார்ப்பனரல்லாத இளைஞர்கள் கவனிக்க வேண்டும். சர்வ ஜீவராசிகள் மீதும் அன்பாயிரு; தன்னைப் போல் பிறரையும் நேசி என்று எல்லா மதங்களிலும் சொல்லியிருக்க மனிதருக்கு மனிதர் வேற்றுமை காட்டுவது அநியாயம் என்பதையும், அதனால் வேற்றுமையே மிக வளரு மென்பதையும் எல்லா இளைஞர்களும் சிந்தித்துத் தெளிய வேண்டும். நாட்டில் வேரூன்றிக் கிடக்கும் மூடப் பழக்க வழக்கங்களை அறவே ஒழிக்க மதுரைப் பார்ப்பனரல்லாத இளைஞர்கள் முயற்சி செய்வார்களாக. லாலாஜீ சொன்னதென்ன வென்பதை நன்கு கவனிப்பார்களாக.

---

## வாலிப நாடார் 3-வது மகாநாடு, அருப்புக்கோட்டை.

### கௌரவ அக்கிராசனர் தேர்தல்.

அருப்புக்கோட்டையில் வருகிற ஆனி மீ நடை பெற விருக்கும் 12-வது மஹாநாட்டின் போது வாலிப நாடார் 3-வது மஹாநாட்டையும் கூட்டி வைக்க இவ்வூர் வாலிப நாடார்கள் 6—5—28-ல் ஓர் கூட்டம் கூடி உபசரணைக் கமிட்டி உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுத்திருப்பது தெரிந்த விஷயம்.

ஷை மகாநாட்டிற்கு கௌரவ அக்கிராசனர் தேர்ந்தெடுப்பதற்காக வைகாசி மீ 5௳ (18—5—28)-யில் கூட்டம் நடைபெறு மாதலால் வாலிப நாடார்களனைவரும் இது குறித்து தங்கள் அபிப்பிராயம் தந்துதவ ஷை கூட்டத்திற்கு விஜயம் செய்யும்படியாகவும், விஜயஞ் செய்ய சௌகரியமில்லாதவர்கள் தங்கள் மேலான அபிப்பிராயத்தைப் பத்திரிகை மூலமன்றி உபசரணைக் கமிட்டி ஆபீஸுக்கு நேரே கடித மூலம் தெரிவிக்கும்படியாகவும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்களென்று காரியதரிசிகள் எழுதுகின்றனர்.

---

## நாடார் மகாஜன சங்கம், மதுரை.

நமது சங்கத்திலிருந்து ஸ்கூல் கிராண்டு, ஸ்காலர்ஷிப் பெற விரும்புகிறவர்கள் விண்ணப்பங்களை ஜூன் மீ 15௳க்குள்ளாக அனுப்பி விட வேண்டும். அதற்குப் பின்னால் வரும் விண்ணப்பங்கள் கவனிக்கப்பட மாட்டாது. ஸ்கூல் கிராண்டு, ஸ்காலர்ஷிப் பெறுகிறவர்களும், அது விஷயமாய்ச் சிபார்சு செய்கிறவர்களும் சங்கத்தின் அங்கத்தினர்களாக இருத்தல் வேண்டுமென்பதை ஞாபகப்படுத்துகிறோம்.

பா. ம. பாண்டிய நாடார்,
ப. வ. சோமசுந்தர நாடார்,
காரியதரிசிகள்.

---

## குறிப்புகள்.

### பின்னர் அறிவிக்கப்படும்.

நம் மித்திரன் ஆசிரியர் நமது 12-வது மகாநாட்டின் முக்கிய வேலைகளை ஏற்றுக் கொண்டிருப்பதால், பினங்கு, சிங்கப்பூர், பர்மா முதலிய விடங்களுக்குச் செல்வதாக உத்தேசித்திருந்த பிரயாணம் தற்போது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. மகாநாடு நடை பெற்றவுடன் அவசியம் பிரயாணமாகக் கூடும். முழு விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

### சந்தா வசூல்.

சாத்தூர், சிவகாசி, தூத்துக்குடி ஆகிய விடங்களில் நம் மித்திரன் சந்தா வசூல் செய்வதற்காக எம் வகையான் நண்பர் க. அருணாசலம் என்பவரை யனுப்பி யிருக்கின்றோமாகையால், அவ்விடங்களிலுள்ள நேயர்களனைவரும் சந்தா வசூலுக் குதவி புரிந்து கண்ணியத்துடன் சந்தாப் பணங்களைக் கொடுத் தனுப்பி வைத்து நம் மித்திரன் அபவிருத்தியை மென் மேலும் நாட வேண்டுகிறோம்.

---

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

## நாடார் 12-வது மகாநாடு.

### உபசரணைக் கமிட்டிக் கூட்டம்.

ஏற்கனவே ஒழுங்கு செய்யப்பட்டிருந்தபடி நாடார் ஹைஸ்கூலில் உபசரணைக் கமிட்டிச்சேர்மன் ஸ்ரீமான் ப. உ. ஆ. சிதம்பர நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்றது. கூட்டத்திற்கு விஜயமாகும்படி அனுப்பியிருந்த அழைப்புச் சடிதங்களுக்கிணங்க, நமது மகாஜன சங்கம் காரியதரிசி ஸ்ரீமான்களான ப. வ. சோமசுந்தர நாடார், பா. ம. பாண்டிய நாடார் இருவரும், ஸ்ரீமான்களான, வே. வ. சண்முக நாடார், பெ. சி. சிதம்பர நாடார், தே. அ. ச. அருணாசல நாடார், சிவந்தி நாராயண நாடார் ராஜாக்கனிநாடார்—விருதுநகர், ஞா. வி. ஆறுமுக நாடார்—சாத்தூர், கந்த நாடார் பி. ஏ. பி. எல். வக்கீல், நடராஜநாடார் பி. ஏ. பி. எல். வக்கீல், திருச்சுளி க. முத்து நாடார், நாகலாபுரம் சாமியய்யாநாடார், ஆ. க. முத்துக்குமாரநாடார், ஆ.தெ.அ.இ. அண்ணாமலைநாடார்—மதுரை, போடி—திருமலாபுரம் எஸ். ஆர். சாமிக்காளை நாடார் முதலிய வெளியூர் பிரமுகர்களும், உள்ளூரில் பல முக்கியஸ்தர்களும் வந்து குழுமியிருந்தனர். கூட்டம் கடவுள் வணக்கத்துடன் இரவு சுமார் 8 மணிக்கு ஆரம்பமாயிற்று. அதில் 12-வது மகாநாட்டைத் திறந்து வைப்பதற்கு ஒரு சிறந்தவரைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்ற பிரச்னை முடிவுக்கு வந்தது. மகாநாட்டைத் திறந்து வைப்பதற்கு சென்னை மந்திரி டாக்டர் சுப்பராயன் அவர்களையாவது, சட்ட மெம்பர்—திவான்பகதூர் கிருஷ்ண நாயரவர்களையாவது வேண்டிக் கொள்ள வேண்டுமென்று ஜெனரல் செக்ரட்டேரி ஸ்ரீமான் ஆ. ஆ. முத்து நாடாரவர்கள் ஒரு தீர்மானம் கொணர்ந்து பிரேரிக்க, போடி-திருமலாபுரம் ஸ்ரீமான் எஸ்.ஆர்.சாமிக்காளை நாடாரவர்கள் ஆமோதிக்க, நமது மகாஜன சங்கம் காரியதரிசி ஸ்ரீமான் ப. வ. சோமசுந்தர நாடாரவர்கள் ஆதரிக்க அத் தீர்மானம் ஏக மனதாய் நிறைவேறியது.

பின்னர் விருதுநகர் ஸ்ரீமான் வே. வ. சண்முகநாடாரவர்கள் எழுந்து அருப்புக்கோட்டை நாடார் பெருமக்களைப் பற்றிப் புகழுரையாடி, அவர்கள் மகாநாடு நடத்துவதில் முன் மாதிரியாயிருப்பார்களென்றும், அதுவரைக்குப் பல சாதனங்கள் அருப்புக்கோட்டையிலுள்ளன வென்றும் கூறி, இம் மகாநாடு நடத்துவதில் தாங்கள் தக்க ஒத்தாசை புரிவதாகவும் வாக்களித்தார். அதன் பின்பு சிவகாசி ஸ்ரீமான் எஸ். நடராஜநாடார் பி. ஏ. பி. எல். வக்கீல் அவர்கள் எழுந்து தாங்களும் வேண்டிய உதவி புரிவதாகக் கூறினார்.

கடைசியாக வெளியூர் பிரமுகர்கள் அனைவரும் இம் மகாநாட்டுக்கு தம் தம்மாலான ஒத்தாசைகள் புரிந்து மகாநாடு வெகு சிறப்பாய் நடைபெறச் செய்ய சம்மதங்கொள்ள சுமார் 9-30க்குக் கூட்டம் இனிது கலைந்தது எனப் பொதுக் காரியதரிசி யெழுதினார்.

## ஆறுமுகநேரி இந்துவுயர்தர எலிமெண்டரி ஸ்கூல்.

### 5-ம் வருஷக் கொண்டாட்டம்.

ஆறுமுகநேரி, ஹிந்து உயர்தர எலிமெண்டரி பாடசாலையின் 5-வது வருஷோத்சவ வைபவமானது நாளது 1928-ம் ஞு மேயீ 17உ மாலை 4½ மணிக்கு ஷை பள்ளிக்கூடத்தின்கண் திருநெல்வேலி ஜில்லா போர்டு பிரஸிடெண்டு திவான்பஹதூர் எஸ். குமாரஸ்வாமி ரெட்டியார் பி. ஏ., பி. எல்., எம். எல். ஸி. அவர்களின் தலைமையின் கீழ் நடைபெறும்.

அவ்வமயம் அனைவர் வரவையும் ஆவலுடன் எதிர்பார்க்கிறோம்.

எஸ். பொன்னையாநாடார்,
மானேஜர்.

## “காரைப் பேட்டை பரிபாலன சங்கம்,” தூத்துக்குடி.

### நிர்வாக வரலாறு:

காரைப்பேட்டையானது அநேக வருஷங்களுக்கு முன் தூத்துக்குடியில் வியாபாரம் செய்த திருநெல்வேலி ஜில்லாவின் வடபாகத்திலும், மதுரை, இராமநாதபுரம் ஜில்லாக்களிலும் உள்ள வடதிசை இந்து நாடார்களின் இவ்வூர் மகமைப் பொது நிதியிலிருந்து கட்டப்பட்டு விருத்திசெய்யப்பட்டது. ஷை பேட்டையைப் பரிபாலிக்கும் இச் சங்கமானது 1919-ம் ஞு மார்ச்சு மாதத்தில் 1860ம் வருஷத்து ஸொஸைட்டி ஆக்ட் 21-வது பிரிவின்படி ரிஜிஸ்ட்ரேஷனானது. இந்தச் சங்கத்துக்கு சுமார் 60 ஜெனரல் மெம்பர்களும், அவர்களிலிருந்து தெரிந்தெடுக்கப்பட்ட கௌரவ உத்தியோகஸ்தர்களும் கௌரவ மெம்பர்களுமாக 15 பேர்களடங்கிய நிர்வாக சபை ஒன்று உள்ளது. மேற்படி பேட்டையில் முன்னோர்களால் கட்டப்பட்ட கட்டடங்கள் தவிர, ரிஜிஸ்ட்ரேஷனுக்குப்பின் அநேக புதுக் கிட்டங்கிகள் வீடுகள் கட்டப்பட்டிருக்கின்றன. இச் சங்கத்திற்குப் பாத்தியப்பட்டவர்களும், இவ்வூரில் வசிக்கிறவர்களுமான சில முக்கிய கிராமங்களிலுள்ள வடதிசை இந்து நாடார்கள் இப்போது சில காலமாக தங்கள் மகமை வசூல்களை தங்கள் தங்கள் ஊருக்கு அனுப்பியபோதிலும் முன்னோர்களால் கட்டப்பட்டு விருத்திசெய்யப்பட்ட கட்டடங்களின் வாடகை, வசூல் முதலிய வரும்படிகளைக் கொண்டு ஆண், பெண் வித்தியா சாலைகள் இரண்டு ஏற்படுத்தி ஒவ்வொரு வித்தியா சாலையிலும் ஐந்தாவது வகுப்புவரை இலவசக் கல்வி கற்றுக் கொடுக்கப்பட்டு வருவதுடன், ஆண் பாடசாலையில் பகலில் படிக்க வர முடியாத கூலிவேலை செய்துவரும் ஏழைப் பிள்ளைகளுக்கு இராத்திரியில் இலவசக் கல்விகற்றுக் கொடுக்கப்பட்டு வருகிறது. இது தவிர யாத்திரையாக வருகிற நாடார்களுக்குத் தங்குவதற்கும் சமயலுக்குமுரிய இட வசதிகள், குடிதண்ணீர் முதலியன வழங்கப்பட்டு வருகின்றன. “ஸ்ரீ ஆனந்த நடராஜ கானசபா” என்று பஜனாலயம் ஒன்று ஏற்படுத்தப்பட்டு அது செவ்வனே நடைபெற்று வருகிறது. அச்சபாவிலிருந்து பிரதி மார்கழிமாதமும் திருவாதிரை உற்சவம் வெகு சிறப்புடன் நடைபெற்று வருகிறது. இவ்வூரில் எட்டையாபுரம் ரோட்டின் கீழ் பக்கம் ரெயில்வே கேட்டுக்கு அடுத்து முன்னோர்களால் கட்டப்பட்ட காம்பவுண்டு ஒன்றுள்ளது. அதில் ஸ்ரீசெல்வ விநாயகர், சிவகாமி அம்பாள் சமேத ஸ்ரீ நடராஜப் பெருமான், பாலகிருஷ்ணன் முதலிய மூர்த்திகளுக்கு ஆலயமும், நந்தவனம், கிணறு முதலியவைகளும் உண்டுபண்ணப்பட்டு ஆலயத்திற்குப் பூசா கைங்கர்யங்கள் குறைவின்றி நடந்து வருகின்றன. இச் சங்கத்தின் ஆதரவில் பொது ஜன அபிவிருத்திக்காக “மா. வே. ஷண்முகவேல் நாடார் ஞாபகார்த்த வாசகசாலை” என்ற நாமத்துடன் ஒரு வாசகசாலை நடந்துவருகிறது. இச் சங்கத்திற்குப் பாத்தியப்பட்ட சகல கட்டடங்களும் வரும் வாடகைப் பணங்கொண்டு நல்ல நிலைமையில் வைக்கப்பட்டிருக்கின்றன. சங்கம் தீர்மானப்படி நடந்து வருகிற செலவுகள் போக மீதப்பணத்தைக் கொண்டு புதுக் கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன.

இவ்வித நிலைமையிலிருந்து வருகிற இச் சங்கத்தின் 7-வது வருஷப் பூர்த்திக் கொண்டாட்டம் 8—9—27-ல் இவ்வூர் ஸ்ரீமான் ஞா. அ. சு. சண்முகநாடாரவர்கள் அக்கிராசனத்தின் கீழ் வெகு சிறப்புடன் நடைபெற்றது. மேற்படி வருஷக் கொண்டாட்டத்தில் தேர்ந்தெடுக்கப்பெற்ற கௌரவ உத்தியோகஸ்தர்களடங்கிய நிர்வாக சபை அங்கத்தினர்களின் விபரம் பின் வருமாறு:—

ஸ்ரீமான்களான அ. துரை [illegible] மு. அ. அ. தனுஷ்கோடிநாடாரவர்கள்—வைஸ் பிரஸிடெண்டு, வ. சி. வ. சிவசங்கர நாடாரவர்கள்—காரியதரிசி, ப. அ. குமாரவேல் நாடாரவர்கள்—உபகாரியதரிசி, பெ. ரா. ம. ஆதிமுத்து நாடாரவர்கள், ஞா. அ. சு. சண்முக நாடாரவர்கள், கொ. சி. பச்சைய நாடாரவர்கள், பா. பி. கு. பொன்னுச்சாமி நாடாரவர்கள், கே. கே. எஸ். எஸ். சிதம்பரநாடாரவர்கள், கூ. கா. ஆ. பெரியசாமி நாடாரவர்கள், அ. ஆறுமுகநாடாரவர்கள், மு. மு. வெ. முத்தைய நாடாரவர்கள், பெ. அ. தில்லைச்சிதம்பர நாடாரவர்கள், பா. சி. தெ. பாண்டியநாடாரவர்கள், கா. சு. பொ. சண்முகவேல் நாடாரவர்கள்—அங்கத்தினர்கள்.

இவர்களில் வைஸ் பிரசிடெண்டு, ஸ்ரீமான் மு. அ. அ. தனுஷ்கோடி நாடாரவர்கள் ராஜிநாமா செய்துவிட்டார்கள். ஷை ராஜிநாமா 18-12-27ல் நடந்த ஜெனரல் மீட்டிங்கில் ஒப்புக் கொள்ளப்பட்டு ஷை ஸ்தானத்துக்கு ஸ்ரீமான் பெ. ராம. ஆதிமுத்துநாடாரவர்கள் வைஸ் பிரசிடெண்டாக நியமிக்கப்பட்டார். அதே மீட்டிங்கில் நிர்வாக மெம்பர் ஸ்தானம் ஒன்று காலியேற்பட்டதால், அதற்கு ஸ்ரீமான் அரி. அ. செ. கந்தசாமிநாடாரவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார். அதன் பின் 23-12-27ல் காரியதரிசி ஸ்ரீமான் வ. சி. வ. சிவசங்கர நாடாரவர்கள் ராஜிநாமா செய்தார். அது விஷயமாக 29—1-28-ல் நடந்த விசேஷ ஜெனரல் மீட்டிங்கில் ஷையாரவர்களின் ராஜிநாமா ஒப்புக் கொள்ளப்பட்டு அந்தஸ்தானத்துக்கு ஸ்ரீமான் கொ. சி. பச்சையநாடாரவர்கள் தெரிந்தெடுக்கப்பட்டார். மேற்கூறிய பிரமுகர்களின் பார்வையின்கீழ் தற்சமயம் இச் சங்கத்தின் காரியாதிகள் யாவும் ஒழுங்காய் நடைபெற்று வருகின்றன.

கொ. சி. பச்சைய நாடார்,
காரியதரிசி.

## செய்தித் திரட்டு.

அருப்புக்கோட்டைக் கருகாமையாக வட புறத்திலுள்ள காரியாபட்டிக் கடுத்து, ஒரு ஆதித் திராவிடர் மதுரை சித்திரைத் திருவிழா பார்த்து விட்டுத் திரும்பி வருகையில் மோட்டாரால் நசுக்கப்பட்டு இறந்து போனார். அவர் அருப்புக்கோட்டையைச் சார்ந்த புலியூர் வாசியாகும். என்னே மனிதனின் காய நிலை!

*　　*

மதுரையின் தெருக்களில் மின்சார விளக்குகள் பரிக்ஷார்த்தமாக ஏற்றப்பட்டன. மூன்று இஞ்ஜின்களில் ஒரு இஞ்ஜின் தான் வேலை செய்தது. ஜூன் மாதம் டாக்டர். சுப்பராயன் வந்து பவர் ஹவுஸைத் திறந்து 3 இஞ்ஜின்களுடன் வேலை செய்யுமாறு செய்யும் வரையில் சேர்ந்தாப் போல் விளக்குகள் எரிய மாட்டா.

*　　*

ஐரோப்பாவில் தேசம் தேசமாகச் சென்று ஆங்காங்குள்ள ஹாக்கிக் கக்ஷிகளைத் தோல்வியுறச் செய்து வரும் நமது இந்திய ஹாக்கிக் கக்ஷி இது சமயம் ஜெர்மனிக்கு வந்து ஹநோவரிலும், பர்லினிலும் இறந்த கக்ஷிகளுடன் விளையாண்டு ஜெயங் கொண்டார்கள்.

*　　*

பம்பாய் மார்க்ஸ் கம்பெனியில் லக்ஷ ரூபாய் நகை களவு போன விஷயமாய் சிலர் பிடிபட்டிருக்கின்றனர். களவு போன நகைகளிலும் பல கண்டு பிடிக்கப்பட்டிருக்கின்றன.

*　　*

ஆரிய சமாஜிகள் தங்கள் மத சம்பந்தமான “சத்தியார்த்தப் பிர்காசம்” என்னும் புஸ்தகத்தை ஜெர்மன் பாஷையில் வெளியிட முயற்சி கொண்டு பண வசூல் செய்து வருகிறார்கள்.

*　　*

சுவாமி சிரத்தானந்தரின் குமாரர் இந்திரா வென்பவர் தமது “அர்ஜுனா” பத்திரிகை மூலம் வகுப்புத் துவேஷத்தை வளர்த்ததாகக் குற்றஞ் சாட்டப்பட்டு 6 மாதங் கடுங் காவல் தண்டனையடைந்திருந்து 10-5-28-ல் சிறையிலிருந்து விடுவிக்கப்பட்டார். இவர் டாக்டர். அன்சாரியின் யோசனைப்படி தேக சுகமடைய மலை வாசம் செய்வார்.

*　　*

அமெரிக்காவில் வின்ஜோஸ் என்னும் இடத்தில் பெருந்த குடும்பியாயிருந்து வந்த ஸ்ரீ வைஷ்ணதாஸ் யதாய் என்ற ஓர் இந்தியர், அங்கு இந்தியர்களுக்குச் சுதந்திரமில்லாக் கஷ்டத்தால் தற்கொலை புரிந்து கொண்டார்.

*　　*

கும்பகோணம் தேவஸ்தானக் கமிட்டியில் ஷையூர் முனிஸிபல் கௌன்ஸிலர் ஸ்ரீமான் க. பெரியதம்பி நாடாரவர்கள் ஓர் மெம்பராக நியமனம் பெற்றிருக்கின்றனராம்.

*　　*

வடலூரில் வைகாசி மீ 11, 12 உ களில் மறைமலையடிகளென்னும் சுவாமி வேதாசலம் அவர்களின் அக்கிராசனத்தின் கீழ் சமரச சன்மார்க்க சங்க மகாநாடும், சமரச சன்மார்க்க சங்கத்தின் 61-வது ஆண்டு நிறைவு விழாவும் நடைபெறும்.

*　　*

மதுரையில் ஒரு சர்வ கலாசாலையை ஏற்படுத்துவதற்கு ஸ்ரீமான் எம். வி. டி. முத்தையா செட்டியார் அவர்கள் 35 லட்சம் ரூபாய்கள் நன்கொடை தருவதாகக் கவர்ன்மெண்டாருக்கு அறிக்கை கொடுத்திருக்கிறார்கள்.

*　　*

மைசூர் ரயில்வேயைச் சேர்ந்த பெலகோலா என்ற ஸ்டேஷனிலுள்ள 50 வயதுள்ள ஸ்டேஷன் மாஸ்டர் ஒரு வண்டியை எதிர்பார்த்து தமது வேலைகளைக் கவனித்துக் கொண்டிருக்கையில் இடி விழுந்து மடியலானார்.

*　　*

ஒரு பத்திரிகையின் ஆதரவில் இரு ஜப்பானியர் வெவ்வேறு திக்கு நோக்கிப் புறப்பட்டு உலக யாத்திரை செய்வதாகச் சென்ற ஏப்பிரல் மீ கிளம்பினர். அவர்களிலொருவரான அரா தமது பிரயாணத்தை 33 நாட்கள், 16 மணிகள், 22 நிமிஷங்களில் முடித்து விட்டு டோக்கியோ வந்து சேர்ந்திருக்கிறார். இவருக்கு செலவு ரூபாய் 400 பவுன்கள் போக இனாம் 300 பவுன்கள் அளிக்கப்படும். இது வரையில் யாரும் இவ்வளவு சுருக்கில் உலகத்தைச் சுற்றியதில்லை.

*　　*

கும்பகோணத்தில் கடும் புயல் காற்று அடித்து 60,000 வாழை மரங்கள் சாய்ந்து பல ஆடுமாடுகளும் சேதமாயின. திருப்பணந்தாள் என்னுமிடத்திற்குச் சென்று கொண்டிருந்த ஒருவரைத் தூக்கி ஒரு வாழைத் தோப்புக்குள் எறிந்து விட்டது.

*　　*

15 லட்ச ரூபாய் செலவு செய்து கல்கத்தாவில் ஒரு சுகாதார ஸ்தாபனம் ஏற்படுத்த ஸ்ரீ ராக்பெல்லர் தர்ம சபையார் யோசித்து வருகிறார்கள்.

*　　*

சென்னைக்கு 22 மைல் தூரத்திலுள்ள தோகூர் என்னும் கிராமத்தில் ஒரு 40 வயதுள்ள ஸ்திரீ வறுமையின் கொடுமை பொறுக்க முடியாமல் தனது இரு குழந்தைகளையும் கிணற்றில் தள்ளி விட்டுத் தானும் விழுந்திறந்தாள்.

*　　*

அயர்லாந்தில் நடந்த சென்ற தேர்தல் பிரசங்கத்தின் போது அயர்லாந்து மந்திரி ஸ்ரீ. மார்லிமுல் தான் கோமான் எனும் வக்கீலை அவதூறாகப் பேசியதாகத் தொடுக்கப்பட்ட வழக்கில் மந்திரிக்கு 500 பொன்கள் அபராதம் விதிக்கப்பட்டது.

## பிழை திருத்தம்.

13-2-28ல் வெளியான மித்திரன் சஞ்சிகையில் உள்ள தஞ்சை ஜில்லா பிறையாறு கணேசர் கும்பாபிஷேக நன்கொடைக்கு ஆப்பிரிக்கா சிங்கேனி ஜூர். எஸ். நாடார் வசூல் ஜாப்தாவில் சில்லரை வசூல் பவு 2-3-0 என்று தவறுதலாய் பவுன் கலத்தில் அச்சிட்டு போனதை சில்லரை வசூல் 2 ஷில்லிங் 3 பென்ஸென்று வாசகர்கள் திருத்தி வாசிக்க [illegible]

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# இது அநியாய மல்லவா ?

நம் புராதன இந்துமத மாண்புநிறைவுற வக்காலத்திலே சில சுய நலக்காரர்கள் தம்மை உயர்த்தி பிறரைத் தாழ்த்தி வைக்கவேண்டி தீண்டாமையெனும் உருவற்ற—நியாயமற்ற தத்துவத்தைப் புகுத்திவிட்டார்கள். அத்தத்துவம் இன்றை நாள்வரையிலும் வலுத்து வந்து வழக்கத்திலிருந்து விட்டது. இத்தீய வழக்கத்தால் நம் இந்து சகோதரர்களில் பெரும்பாலோர் சதா துன்புற்றிருக்கின்றார்கள். அவர்கள் அடிமைக் குழியில் ஆழ்ந்து பரிதபிக்கின்றார்கள். ஆண்டவன் சந்நிதானத்தில் ஏற்றத் தாழ்வில்லை யென்பதுதான் வேத சம்மதமான துணிபு. இதையோர்ந்து தீண்டாமையெனும் அநியாய வழக்கத்தை யொழிக்கப் பல பல மேதாவிகள் தம் தம் காலத்தில் பாடுபட்டுப் போயிருக்கின்றனர். தற்போது மகாத்மா காந்தியடிகள், அன்னவர் சிஷ்ய குழாங்கள், பல அறிஞர்கள் இதை யொழிக்க முனைந்து வேலை செய்து வருகின்றனர். இத் தீண்டாமை முற்றும் ஒழிந்து சகலத்திராளும் சமத்துவம் பெற்று க்ஷேமங்கொள்ள இறைவன் அருள்வாராக.

மதம் மதம் என்று மதங்கொண்ட வைதீகர்கள் இத்தீதுற்ற வழக்கத்தைக் கைவிட மறுக்கிறார்கள். நம்மதத்தில் தீண்டாமையென்பது கிடையாது. தம் நன்மைக்கென மதத்தின் பேராலும் சாஸ்திரத்தின் பேராலும் இதை நிலை நிறுத்திவிட்ட அக்காலத்து விஷமிகளின் அடிச்சுவட்டைப்பற்றி இக்காலத்து சுய நலக்காரர்கள் இதையனுஷ்டித்து வருகிறார்கள். சிலர் அறியாமையாலும் கைக்கொண்டிருக்கலாம். அநியாயமாகவும் அறியாமையினாலும் வளர்ந்துநிற்கும் இத்தீண்டாமையால் ஒரு பெரும் பகுதியினர் துன்பப்படுவது சொல்லத்தரமல்ல.

பார்க்கக்கூடாது; வீதியில் நடக்கக் கூடாது; பள்ளியில் படிக்கக் கூடாது; ஆலயந் தொழக்கூடாது என்னும் இம்மாதிரி பல பல கொடுமைகளுக்குட்படுத்தப் பட்டுவருகிறார்கள். அமேத்தியம் தின்று அதில் புரண்டு திரியும் பன்றி நாய்களுக்குள்ள சுதந்திரங்கூட இம் மனிதர்களுக்கில்லாது போய்விட்டது. இம்மாதிரி தம் வர்க்கத்தினரைப் புறக்கணித்து அவர்களைக் காலின் கீழ் போட்டு நடப்பது அநியாயமல்லவா? அவர்களும் இந் நோய் கொண்ட வைதீகர்கள்போல் ஆண்டவனால் சிருஷ்டிக்கப்பட்டவர்கள் தானே! வைதீகர்கள் ஆண்டவன் வழி நடப்பதாகச் சொல்லிக்கொள்கிறார்கள். ஈதென்ன பேதமை! ஆண்டவன் தன் சிருஷ்டியில் ஒன்றையொன்று புறக்கணித்து வாழவா சொல்லியிருக்கிறார்? என்ன வித்தியாசங்கொண்டு மனிதரில் ஏற்றத்தாழ்வு காட்டி தொடாதே; பாராதே என்று சொல்ல விருக்கிறது? எல்லோரும் யோனி வாய்ப்பட்டு வந்தவர்கள் தானே! அசுத்த முள்ளவர்களையும் நோயாளிகளையும் தொடக்கூடாது தான். அதுவும் அன்பு திகழ்ந்து தொட்டுக் கொள்வதில்தான் ஆண்டவனுக்குப் பிரியம். உண்மையும், நியாயமும் ஒரு புறமிருக்க அறிவில்லாத்தனமாகவும் அநியாயமாகவும் தீண்டாமையென்பதற்கு ஆதாவு காட்டி வருவது பாவமேயாகும். ஆகையால் இப்பாவகரச் செயலுக்காளாகாமல் மேற்குலத்தார் என்று சொல்லிக் கொள்பவர் தாழ்த்தப் பட்டிருப்பவர்களைக் கைதூக்கிவிட்டு தம்முடன் சமத்துவமாய் வைத்து நடத்திவருவார்களாக. இதுவே மனிதத் தன்மைக்கும், ஈசுவரனருளுக்கும் உகந்ததாகும் என்பதை அறிய வேண்டுகிறேன் என்று ஒரு நாடார் எழுதுகிறார்.

மீ. சி. சுந்தரநாடார்,
போடிநாயக்கனூர்.

# நாடார் 12-வது மகாநாடு.

## கால்ப் பந்தாட்டப் போட்டி.

நமது நாடார் மகாஜன சங்கம் 12-வது மகாநாடு இவ்வூரில் கூடுவதை முன்னிட்டு மேற்படி மகாநாட்டைச் சிறப்பிக்கும் பொருட்டும் நமது நாடார் ஜன சமூகத்தவர்கள் தேகப்பயிற்சியின் அத்தியாவசியத்தில் உற்சாகமும் ஊக்கமும் கொள்ளும் பொருட்டும்நம்மவர் வசிக்கும் ஒவ்வொரு ஊரிலுமுள்ள நாடார் குலப் பந்தாட்ட வாலிபர்களுக்குள் போட்டிப் பந்தயம் வைத்து பரிசுகள் கொடுப்பதாய் ஏற்பாடுகள் நடந்து வருகின்றனவாகையால், ஆங்காங்குள்ள நாடார் குல வாலிபர்களடங்கிய புட்பால் டீம்கள் இப் போட்டியில் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். பிரவேசக் கட்டணம், விளையாட்டுத் தேதி முதலிய விபரம் பின்னால் அறிவிக்கப்படும்.

ஜி. ஏ. தர்மதுரை,
காரியதரிசி,
நாடார் 12-வது மகாநாட்டு
புட்பால் டோர்னமெண்ட் கமிட்டி,
அருப்புக்கோட்டை.

# பால்ய நாடார் சங்கம், கோப்பிநாய்க்கன்பட்டி.

இச் சங்கத்தின் ஆதரவில் 27-4-28ல் வி. கே. வி. சாலை மானேஜர் ஸ்ரீமான் நா. க. வ. மாரியப்ப நாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் ஓர் பொதுக் கூட்டம் கூடியது. ஸ்ரீமான் எஸ். பழனிச்சாமி நாடாரவர்கள் கடவுள் வணக்கம் பாடிய பின், 'நல் லொழுக்கம்' என்பதைப் பற்றி ஸ்ரீமான்களான கே. வி. குருமூர்த்தி அய்யர், ஜெ. ஏ. பொன்னையா நாடார், கிருஷ்ண அய்யர், பால்ராஜ ஜேம்ஸ் நாடார், தவசி நாடார், காளிதாஸ் செட்டியார் ஆகியவர்கள் பேசினார்கள். பின்னர், நம் குலாபிமானியும், தேசாபிமானியும், "நாடார் குல மித்திரன்" மானேஜரா யிருந்தவரும், சிறந்த அறிவாளியுமான ஸ்ரீமான் திருமேனிநாத நாடாரவர்களுடைய அகால மரணத்தைக் குறித்த அனுதாபமாகக் கூட்டத்தார் யாவரும் 5 நிமிஷம் வரை நின்று அன்னவர் நற்கதி யடையவும், அன்னவருடைய பந்துக்கள் ஆறுத லடையவும் பகவானைப் பிரார்த்தித்தார்கள். பின்பு ராஜ வாழ்த்துக் கூறப்பட்டுக் கூட்டம் இனிது கலைந்தது என்று காரியதரிசி ஸ்ரீமான் ஜே. ஏ. பொன்னையா நாடார் எழுதுகிறார்.

# இருளப்பபுரம்.

## பெருமாள் சுவாமி மஹோத்சவம்.

24—5—28-ல் கொடி யேற்றம் ஆரம்பித்து சகல ஆடம்பரங்களுடன் வெகு சிறப்பாய் 2-5-28-ல் திருவிழா இனிது முடிவுற்றது. எல்லோர்க்கும் ஒன்றான இறைவனது மகிமையை ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு விதமாய்க் கொண்டாடும் முறைகளைக் கண்டு ஒரு சாரார் பொறாமை கொள்ளக் காரணம் யாதோ? 70 வருடத்திற்கு முன் இந்துக்களா யிருந்து இப்போது கிறிஸ்தவர்களா யிருக்கும் சிலர், எம் பெருமானை எழுந்தருளச் செய்வதைத் தடை செய்ய ஏற்றவாறு முயற்சி எடுத்து மனுக்கள் பல கொடுத்தார்கள். ஆனால்காருண்ய அரசாங்கத்தார் உண்மையை உணர்ந்து அம் மனுக்களை உதறித் தள்ளி உற்ற போலீஸ் பாதுகாப்பும் உதவ, உற்சவம் இடையூறின்றி நிறை வுற்றது. ஒன்பதாம் திருநாளன்று பகல் 5000 ஆட்களுக்கு அறுசுவை யுடன் அன்னம், யாதொரு வேற்றுமையு மின்றி சம பந்தி போஜனமாக அளிக்கப்பட்டது கவனிக்கற்பாலது.

கிருஷ்ணப்பெருமாள்,
தென் திருவிதாங்கூர்.

# மிருக பலி.

## ஆதித் திராவிடர்களின் ஜீவகாருண்யம்.

ஏப்ரல் மாதம் 11, 12, 13 தேதிகளில் நடைபெற்ற துத்திக்குளம் செல்லாண்டியம்மன் திருவிழாவில் ஆடு கோழிகளை பலியிட வேண்டுமென்பது அரிபக்தர்களின் பிடிவாதம்; கடவுள் சந்நிதானத்தில் ஆடுகோழிகளை பலியிட்டு வணங்குவது பாவமான காரியம் என்பது சிவபக்தர்களின் கொள்கை. இவ்விருகட்சிகளுக்கும் சுமார் 2 மணி நேரம் தர்க்கம் நடைபெற்றது.

முடிவாக ஒரு ஆட்டுக் குட்டியின் கழுத்தில் மாலையைப்போட்டு குலுக்கினால் (உடல் முழுதும் சிலிர்த்து ஆட்டுதல்) வெட்டி விடுவதென்று முடிவு செய்தார்கள். 2 மணிக்கு அதிக நேரமிருந்தும் ஆட்டுக்கிடா குலுக்கவே இல்லை. அச்சமயம் அரிபக்தர்கள் வெகுண்டெழுந்து காளிக்குகண்ணில்லையா? காதில்லையா? சத்தில்லையா? என்று சத்தமிட்டு சுவாமியைத் திட்டினார்கள். (எல்லா உயிர்களிலும் நிறைந்திருக்கின்ற பராபரன் ஆட்டின் மாமிசத்தின் மீது இச்சைக் கொள்வாரா? முடிவாக வெட்டு என்கிற தீர்மானம் முடிவுக்கு வந்தது. அப்போதே அரிபக்தர்களின் மனதில் ஆத்திரம் பெருகியது என்றாலும் சமாதானத்துடன் வீடு சென்றார்கள்.

12-4-28-ல் காலையில் அரிபக்தர்களின் கூட்டம் ஒன்று நடைபெற்றதில் கிடாவெட்டுவதே நன்மார்க்கம் என முடிவு செய்யப்பட்டது. உடனே பட்டை நாமம் போட்ட அரிபக்தர் ஒருவர் வெகுண்டெழுந்து கையில் கொடுவாளேந்தி நான் இன்று கிடா வெட்டுகிறேன்; தடை செய்கிறவர்கள் தாராளமாய் வரலாம் என்று ஆர்ப்பரித்து முன் வந்தார். 10 ஆடுகள் கொண்டுவந்து நிறுத்தப்பட்டன. ஆடுகளின் கழுத்தில் பூமாலை போட்டு ஊர்கோலம் வந்து காளிகோவிலில் 10 ஆடுகளையும் (அம்மே) (அப்பே) என்று அலற அலற பலி செய்து முடித்தனர். இக்கொடும் செயலைக்கண்ட குணசீலர்களின் மனதில் துக்கம் அதிகரித்து விட்டது. ஒருவர் கண்ணீர் விட்டழுதார்.

12-4-28-ல் இவ்வூர் ஆதித்திராவிடர்களின் பூஜை நடைபெற்றது. இவர்களின் பூஜையில் பலியிடுதலையே காணோம். ஆதித்திராவிடர்களின் பூஜையில் பழம் தேங்காய் மாவிளக்கு புஷ்பங்களே நிறைந்து காணப்பட்டன. இவர்களின் நெற்றியில் திருநீறு, சந்தனம் நாமம் முதலிய மதக்குறிகள் அழகுபெற விளங்கின. சில உயர்ந்த ஜாதி இந்துக்கள் இவர்களை ஆடு கோழிகளை பலியிட்டு வணங்கும்படி தூண்டினார்கள். காளியம்மனுக்கு பலியிடாவிட்டால் கோபம் வந்துவிடுமென்று பயமுறுத்தினார்கள். தங்களின் பட்டியிலிருந்து இனாமாகவும் கடனாகவும் ஆடுகள் தருவதாகவும் கூறினார்கள்; ஒன்றும் பலிக்கவில்லை. இவ்வூர் ஆதித்திராவிடர்கள் கடவுள் வணக்கம் கல்வி கைத்தொழில் நாகரீக முதலியவைகளில் சிறந்து முன்னேற்றம் அடைந்தவர்கள். இவர்களுக்கு சுய அறிவு அதிகம். இதனோடு சேலம் ஜில்லா ஆதித்திராவிட மகாஜன சபைத்தலைவர் ஸ்ரீமான் ஆர். வரதப்பன் அவ்விடம் இருந்தார். ஆண்டவனுக்கு ஆட்டுக்கிடா லஞ்சம் கொடுத்து வணங்குதல் அறிவுடமை ஆகாதென்று பலருக்கும் கூறினார். ஏழை மக்களின் பூஜை எவ்வித இம்சையுமின்றி நடைபெற்றது குறிப்பிடத்தக்க விஷயம். உலகம் என்பது உயர்ந்தோர் மாட்டே. பாவத்தின் பலன் மரணம். 13-3-28-ல் தேருக்கு ஆட்டுக்கிடா பலியிடுவதென்று அரிபக்தர்கள் முன்வந்தார்கள்; சிவபக்தர்கள் தடை செய்தார்கள். வாக்குவாதம் பலத்து அடிதடி சண்டையும் நடந்துவிட்டது. உயிர்ச்சேதமில்லை. கேஸ் நடந்து வருகின்றது என "சுதேசமித்திர"னில் ஒரு நிருபர் எழுதுகிறார்.

# நீதிக் கூட்டம்.

மதம் கடவுளா லேற்படுத்தப்பட்டதல்ல; ஆனால் கடவுளைக் காண வழி காட்டியாய் ஏற்படுத்தப்பட்டது.

*　　*

உண்மை மதம் எல்லோருக்கும் தராசு போ லிருக்கிறதே தவிர சுய நல அஸ்திவாரத்திலிருந்து மூடக் கொள்கைகளெனும் கட்டட முண்டாக்கி மக்களை ஏமாற்றி பிச்சை எடுப்பதிலும் இகழ்ச்சியான பாவ போக்கிஷமான தொழிலைச் செய்யப் போதிக்க வில்லை.

*　　*

அரசர்க்குப் பெரிய ஜீவனும், ஏழைக்குச் சிறிய ஜீவனும் அமலன் கொடுக்கவில்லை. பிராமணர்களெனத் தங்களை உயர்வாகச் சொல்லிக் கொள்வோர்களுக்கு உயர்ந்த ஆத்மாவும், தாழ்ந்தோ ரெனச் சொல்லப்படுவோர்களுக்கு தாழ்ந்த ஆன்மாவும் இறைவன் நல்கவில்லை. ஈசன் முன் சகல மதஸ்தர்களும், ஜாதியினர்களும் சமமே.

*　　*

சுகத்தைக் காட்டிலும் துன்பம் அறிவையும், அனுபவத்தையும் வளர்க்கிறது.

*　　*

பொறாமை யெனும் பிணி யொன்று உலகத்தி லில்லாவிடில் இப்போது மனிதர்களைப் பிடித்திருக்கும் கஷ்டங் கவலைகளில் பாதிக்கு மேல் தொழிலில்லாமல் போய் விடும்.

*　　*

தந்திரமும், சாமர்த்தியமும், யுக்தி யோசனைகளும் அறிவின் சேய்கள்.

*　　*

அறிவை ஒரு நல்ல பாம் பெனலாம். தீய தந்திரச் செய்கைக ளெல்லாம் சர்ப்பத்தினுடைய விடம் போன்றது. தூய சாமர்த்தியச்செய்கை களெல்லாம் அதனிட மிருந்துண்டாகும் இரத்தினம் போன்றது.

*　　*

ஒருவர் ஒரு காரியத்தை ஸ்தாபிக்க—முன்னேற்ற முயற்சித்தால் பேத புத்தி யுள்ளவர்களுக்கெல்லாம் முனியாலும், வருத்தத்தாலும், ஆத்திரத்தாலும் அடிவயிற்றில் நெருப்புக் கட்டியது போ லிருக்கும்.

*　　*

மனிதர் உயர்ந்த பதவியையும், மிகுந்த செல்வத்தையும் சம்பந்தம் செய்து கொண்டால் எதிர் பாராத பெருமைகளும், கௌரவங்களும் நல்வரவு கூறி எதிர்கொண்டழைக்கின்றன.

*　　*

மற் றெல்லா யோக்கியங்களுக்கும் பங்காளிகளா யிருந்தாலும், பொருளில்லாவிடில் தற்கால உலகம் பூரண கௌரவம் கொடுப்ப தில்லை.

*　　*

பலர் தங்கள் காரியங்கள் சித்தி பெறும் வரை பாதரக்ஷையாக இருந்துவிட்டு ஜெயமான உடன் தலைப்பாகையாக மாறி விடுகிறார்கள். காலச் சக்கரம் ஒரே நிலையி லிருப்ப தில்லையென்பதை யிவர்கள் மறந்தார்கள் போலும்.

*　　*

சிலர் சிலரிடத்தில் நல்லவர்களாயும், சில ரிடத்தில் தீயவர்களாயும் நடந்து கொள்ளுகிறார்கள்.

*　　*

அவசரப் புசிப்பு நோய்க்கு உணவு. சிந்தனை அறிவிற்கு விருந்து. தேகாப்பியாசம் பிணி வெள்ளம் வரு முன்னே போடும் இரும்பாலாய அணை.

*　　*

சரீரம் அதிகப் பருமனா யிருந்தாலும், அல்லது அதிக மெலிவா யிருந்தாலும் சங்கடமே. நிதானம் பிரதானம்.

*　　*

உண்மைக் கழுவோர்களை விட ஒப்பனைக் கழுவோர் மிகுதி. இதைக் கண்டு பிடிப்பது வெகு கஷ்ட மல்ல.

அ. கு. அண்ணாமலை.

நீதிக் கூட்டத்தில் நியாய
[மற்ற வோர் செயல்
சாதித்தல் காணுவது சாத்தி
[யமோ ?

Tamil Heritage Foundation International Digital Library EBook collection

# நடுவேனிற் கனவு.

## 1958-ல் லண்டன் நகரம்.

"இந்த நிலையில் போய்க் கொண்டிருந்தால் லண்டன் நகர வண்டிப் போக்கு வரவுக் கஷ்டத்தை ஒரு வழிப்படுத்துவது எப்படி யென்பதே பெருஞ்சிக்கலான விஷயமாகவிருக்கிறது" என ஆரம்பித்து லெப்டினனண்ட் கர்னல் பிரபாஸான் என்பவர் "டெய்லிமெயில்" பத்திரிகையில் பின் வருமாறு எழுதுகிறார்:— 1927-ம் ஆண்டில் லண்டன் நகரத்தில் சுமார் எட்டு இலட்சம் மோட்டார் வண்டிகளிருந்தன. இந்த ஆண்டில் அத்தொகை பத்து இலட்சத்திற்கதிகமாக ஏறிவிடும். இன்னும் ஒருபத்து அல்லது இருபது வருடங்களில் 20 இலட்சமாக மாறிவிடும் என்பதில் தடையில்லை.

பிரிட்டிஷ் தீவுகளில் சராசரி பார்த்தால் 26 பேருக்கு ஒரு மோட்டார் வண்டி வீதம் இப்பொழுதிருக்கிறது. அமெரிக்காவிலோ 5 பேருக்கு எழு வண்டிகள் வீதமிருக்கின்றன. அப்படியிருந்தும் மோட்டார் விற்பனை யதிகமாகிக்கொண்டே தான் வருகிறது. அமெரிக்காவில் ஒரு மைலுக்கு 40 மோட்டார் வண்டிகள் என்று ஒரு கணக்கும் எடுத்திருக்கிறார்கள். லண்டனிலும் கூடிய சீக்கிரம் இத்தகைய போக்கு வரவு நெருக்கடி ஏற்படக் கூடும். இதற்கென்ன வழி?

லண்டனில் இருபது இலட்சம் மோட்டார் வண்டிகள் இருப்பதாக வைத்துக் கொள்ளலாம்.

இப்பொழுது லண்டன் சாலைகள் இருக்கிற நிலைமையில் அவ்வளவு பெரிய தொகையான வண்டிகள் வருவதாயிருந்தால் லண்டன் வண்டிப்போக்கு வரவு அநேகமாய்த் தடைப்பட்டு நின்றுவிடும் என்றே சொல்லலாம். போதாக்குறைக்கு லண்டன் நகர மக்கள் தொகை சென்ற இருபத்தைந்து ஆண்டுகளில் நூற்றுக்கு 23 வீதம் பெருகியிருக்கிறது. நாம் கனவு காண்கிற 1958-வது ஆண்டிற்குள் குறைந்தது இன்னும் ஒரு 2000000 பேர்களாவது அதிகமாகிவிடுவார்கள். ஆகவே ஆயிரக்கணக்காகவும் பதினாயிரக்கணக்காகவும் தெருக்களில் கால் நடையாகச் செல்லும் மக்கள் அதிகமாவார்கள்.

அதிலும் போக்குவரவு அதிகமாகவிருக்கிற நெருக்கடியான நேரங்களில், அக்காலத்தில் லண்டன் தெருக்கள் எப்படி யிருக்குமென்று எழுதிமுடியாது. தெரு மூலைகளை வண்டிகள் திரும்புவதற்கு ஏற்றவாறு அகற்றியமைத்தல், இன்னின்ன தெருக்கள் வழியாகத்தான் வண்டிகள் செல்லவேண்டுமென உத்தரவிட்டுக் கட்டுப்பாடு செய்தல் போன்ற தற்காலமுள்ள உபாயங்களைக் கொண்டு நாம் கனவுகாண்கிற அக்கால வண்டிப்போக்கு வரவை யடக்கியாள நினைத்தல் கடல் புரண்டோடும் வெள்ளத்தைக் கையை வைத்து அணைபோட நினைப்பதை யொக்கும். இருந்தாலும் என்ன தான் செய்வது? அவ்வளவு வண்டிகள் எப்படி யோடுவது?

### தலைக்கு மேற் செல்லும் சாலைகள்.

லண்டன் நகர முழுதிலும் பரவுமாறு புதுச் சாலைகளை யமைத்தால் ஒருவாறு அந்த சிக்கலை நிவர்த்திக்கலாமென ஒரு சிலர் கூறுகின்றனர். லண்டன் நகரத்திலுள்ள பெரிய சாலைகளை இரண்டுமடங்காக அகற்றியமைத்தல் என்று வைத்துக் கொண்டாற் கூட இப்பொழுதிருக்கும் லண்டன் சாலை நிதியைப் போல் எத்தனையோமடங்கு அதிகமான நிதிகள் வேண்டும். லண்டனின் முக்கிய சாலையாகிய ஆக்ஸ்போர்டு சாலையை "மேன்ஷன் ஹவு"விலிருந்து "மார்பின் ஆர்ச்"வரையிலும் பெரிதாக்குவதாக வைத்துக்கொண்டாலும் அதற்கு முப்பத்தைந்து இலட்சம் பவுன்கள் ஆகுமென்று மதிப்பிடப்படுகிறது. எனவே, லண்டனிலுள்ள ஆக்ஸ்போர்டு சாலையைப் போன்ற பெரிய சாலைகளை யெல்லாம் அகற்றியமைப்பதென்றால் அதற்குப்பிடிக்கும் செலவைக் கொண்டு மற்றொரு பெரிய ஐரோப்பிய யுத்தம் நடத்திவிடலாம்.

இந்த திட்டம் ஒருபுறமிருக்க, ஆக்ஸ்போர்டு தெருவிற்கு வடக்கேயுள்ள சிறு தெருக்களினூடே தலை மட்டத்திற்கு மேலாகச் செல்லும் புதுச்சாலைகளை யமைக்கலாமென்று ஒரு யோசனை கூறப்படுகிறது. அதற்கு சுமார் 2 லட்சம் பவுன்கள் பிடிக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறது. இது ஒரு நல்ல யுக்தியென்று தான் சொல்ல வேண்டும். பூமியில் வசதியில்லாவிட்டால் ஆகாயத்தில் ஏன் கண்டுபிடிக்கக் கூடாது?

தலைமட்டத்திற்கு மேற்செல்லும் சாலைகள் புதிதல்ல. ஏனெனில் லண்டன் நகரத்திற் செல்லும் பல புகை வண்டிச் சாலைகள் நெடுந்தூரங்களுக்கு உயரத்தில் அமைக்கப்பட்டிருந்தன. நியூமார்க்கில் மின்சார இரயில்கள் செல்வதற்கு உயர்ந்த பாதைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. தேம்ஸ் நதியின் பாலங்களின் உயரத்துக்குச் சரியாக சாலைகளையுயர்த்த வேண்டுமென்றும் சொல்லப்பட்டு வருகிறது. இருந்தாலும் இதுவரையில் தலை மட்டத்திற்கு மேல் ஆகாயப் பாதைகள் அமைக்க வேண்டுமென்று யோசனை கூறப்படவில்லை.

ஏற்கனவே மின்சார இரயிற்பாதைகள் அமைக்கப் பட்டிருக்கின்றன. அவைகளின் மேலே தொடர்ச்சியாக இந்த வண்டிப் போக்குவரவு சாலையை அமைத்துவிடலாம். வேறு புது இடந் தேடவேண்டியதில்லை.

வெளியிலிருந்து லண்டனிற்குள் வரும் வண்டிகளை ஆகாயப்பாதை வழியாகவே லண்டன் புகைவண்டி நிலையம் வரையிற் செலுத்திவரும்படி யேற்பாடு செய்துவிட்டால் நாம் மேற்குறித்த சிக்கலில் ஒரு பகுதி தீர்ந்துவிடும். அவ்வாறு மேலேவரும் மோட்டார் வண்டிகளை நிறுத்தி வைப்பதற்குத் தகுந்த இடத்தைப் புகைவண்டி அதிகாரிகள் ஏற்படுத்திக் கொடுப்பார்கள். வெளியிலிருந்து கணக்கற்ற மக்களை ஏற்றிவரும் மோட்டார் பஸ் வண்டிகள் தயக்கமின்றி உள்ளேவருவதற்கு இது ஏற்ற வழியாகும். லண்டனின் நடுப் பகுதியிலிருந்து சுற்றுப்புறங்களுக்கு அளவு வரையற்றதாய் ஓடிக் கொண்டிருக்கும் ஆறு சக்கரங்கள் அமைந்த பஸ் வண்டிகள் செல்ல ஒரு பெரிய அரச பாட்டை யமைத்தது போலாகிவிடும்.

தலை மட்டத்திற்கு மேல் வண்டிப் பாதை போடுவதென்பது இலேசான காரியமல்ல. பெரும்பாலும் அப்பாதை கட்டடங்களுக்கு மேலாகவே செல்ல வேண்டியதாகவிருக்கும். சட்டப்படி பார்த்தால், ஒரு கட்டடத்தின் மேலுள்ள கட்டடப் பரப்பிற்குச் சரியான காலியிடம் கட்டடத்தின் சொந்தக்காரனுக்கே உரியதாகும். ஆகவே, அந்த இடத்தில் சாலையமைப்பதற்காக அவ்வக் கட்டடச் சொந்தக் காரர்களுக்கெல்லாம் ஏதோ ஒரு குடிக்கூலி கொடுக்காமல் பாதைபோட முடியாது. கூச்சலோ சொல்லிமுடியாது. கீழேயுள்ள கட்டடங்களுக்கு வெளிச்சக் குறைவு வேறே ஏற்பட்டுவிடும். இவையொரு புறமிருக்க, மேற் செல்லும் பூதாகாரமான பாதையைத் தாங்கும் தூண்களை எங்கே, எப்படியமைப்பது என்பது ஒரு பெரிய கேள்வியன்றோ?

இருந்தாலும் ஆகாயப்பாதைகள் வந்துதான் தீரவேண்டும். பின் வரும் தலை முறையில் ஆக்ஸ்போர்டு சாலை, பிக்கா டில்லி முதலிய இடங்களில் வசிப்போர்களது கட்டடங்களுக்கு மேலாகச் செல்லும் கற்சாலைகளை மக்கள் பார்க்கப் போவது உறுதி. அந்தச் சாலையின் வழியாக பெரிய பெரிய ஆறு சக்கர மோட்டார் பஸ்கள் குறுக்கும் நெடுக்குமாக ஓடப்போகின்றன. இடையே மின்சார வண்டித் தொடரும் துடிக்கொண்டிருக்கும். வானத்தை யளாவியெழும் இரும்புக் கோபுரங்கள் பல கட்டப்பட்டு அவற்றுள் மின்சார "லிப்ட்" என்ற ஆள் தூக்கி இயந்திரங்கள் அமைக்கப் பட்டிருக்கும். கண் மூடித் திறப்பதற்குள் நூறு அடி உயரத்திற்கு மேல் லண்டனின் வண்டிப் போக்கு வரவு நடந்துகொண்டிருக்கும்.

### சுரங்கப் பாதைகள்.

இனி பூமிமட்டத்திற்குக் கீழே பெரிய சாலைகளை யமைப்பதென்பது ஒரு யோசனை. கிழக்கு லண்டனைப் பொறுத்த வரையில் ஆகாயப் பாதைகள் அமைப்பதை விட பூமிமட்டத்திற்குக் கீழ் சுரங்கப்பாதைகள் அமைப்பதே நலம். ஆனால் இதற்கு செலவு என்ன ஆகுமென்று கவனித்தாலோ பயமாக இருக்கிறது. இப்பொழுது லண்டனில் பூமிக்குக் கீழ் ஓடிக் கொண்டிருக்கும் ஜி. என். நகரக் குழாய் இரயிற்பாதையை ஒரு மைல் தூரம் அதிகமாக்குவதற்கே பத்து இலட்சம் பவுன்கள் பிடிக்கிறதாம். அப்படியிருக்க சாலைகள் அமைப்பதென்றால் குறைந்தது மூன்றுமடங்காவது அதிகச் செலவாகும்.

பலர் சுரங்கப் பாதைகளில் போவதை விரும்புகிறதில்லை. ஆனால், அதில் பல நன்மைகளிருக்கின்றன. போடுகிற சாலைகளை நூல் பிடித்தது போல நேராகப் போடலாம். அதனால் வண்டிப் போக்குவரவை யொழுங்கு படுத்துவது எளிதாகும். பாதைகளில் கால் நடையாகச் செல்லுகிறவர்கள் அங்கு இருக்கமாட்டார்களாகையால் அது ஒரு புறத்தில் நலந்தருவதாகும். ஆகவே, அத்தகைய மேன்மையான சுரங்கப்பாதைகளை நமது பின் வரும் மக்களாவது கண்டு களிக்கட்டும்.

---

# பொங்கல் பண்டிகையில் கொலை புரிதல் தருமமா?

## ஓர் குடும்பத்தின் சம்பாஷணை.

(அருப்புக்கோட்டை ஜீவகாருண்யப் பிரசாரசபையின் 27-வது பிரசுரம்.)

சீதை—அம்மா! பொங்கல் வந்து விட்டதென்றால் நல்லபச்சரிசியும் சர்க்கரையும் வாங்கச் சொல்ல வேண்டியிருக்க, அய்யா வீட்டிற்கு வரும்போதெல்லாம் கிடாயும், கோழியும் வாங்கச் சொல்லுகிறீர்களே காரணமென்ன?

தாய்—அம்மா சீதை! நல்லகேள்வி கேட்டாய். மாரியம்மன் பொங்கலென்றால் கோழியடித்துக் கிடாய் வெட்டி அம்மனைத் திருப்திசெய்து வைக்க வேண்டும். உனக்கு அம்மை வந்திருந்த போது பிரார்த்தனை செய்திருந்தோம். அதை இவ்வருஷம் நிறைவேற்றிவைக்கவேண்டும்.

சுந்தரம்—ஏனம்மா, அம்மை வருதல் ஒரு தொத்துநோயென்று எங்கள் உபாத்தியாயர் சொல்லிக்கொடுத்தாரே நீங்கள் மாரியம்மனுக்குப் பிரார்த்தனை செய்து அம்மை நோய் வராமல் செய்து விட்டீர்களோ?

சீதை—இல்லை தம்பி! எனக்கு அம்மை வந்ததால்தான் என்முகமெல்லாம் தழும்புகளிருக்கின்றன; பார். நல்ல வேளையாக கண்ணில் கருவிழிக்குப் பக்கத்தில் முத்து உண்டாயிருந்தும் கண் பார்வை கெடவில்லை.

சுந்தரம்—என்ன அக்கா! அம்பிகைக்குப் பிரார்த்தனை செய்தும்அம்மை வந்துவிட்டதென்றால் அம்பிகை செய்த சகாய மென்ன?

தாய்—ஈதென்ன விந்தையாயிருக்கிறது! பிரார்த்தனை செய்தால் நோய் வராமலிருக்குமா? வந்த நோய் அதிகக் கஷ்டப்படுத்தாமல் போகும். சீதாவுக்ும் கண்ணில் கோளாறில்லாமல் செய்தது அம்பாளுடைய கிருபைதான்.

சுந்தரம்—ஏனம்மா, நோய் வருத்தத்தைச் சாந்தப்படுத்துவதும் நீக்குவதும் பிரார்த்தனைசெய்து ஆடு, கோழிகளைப் பலியிடுவதால் முடியுமானால், நம்மள் தம்பி கிருஷ்ணனுக்கு அம்மை வந்த போதும் பிரார்த்தனை செய்தீர்களே, அவன் ஏன் இறந்து போனான்?

தாய்—என்னமோ! அவனுக்கு அற்ப ஆயுளாய்ப் போயிற்று. அம்மாள் என்ன செய்வாள்? நானும் இரட்டைக் கிடாய் வெட்டுவதாய் எல்லா தேவதைகளுக்கும் பிரார்த்தனை செய்தேன். நான் செய்த தீவினை அவனை மண்ணில் போட்டுப் புதைக்கும்படியாயிற்று. (கண்ணீர் விடுகிறாள்.)

சீதை—சும்மாயிருக்க மாட்டாயா தம்பி? கொஞ்ச நாளாகத்தான் கிருஷ்ணன் இறந்த துக்கத்தை அம்மா மாற்றியிருந்தார்கள். நீ பழைய படியும் தூண்டி விட்டாய்.

சுந்தரம்—இல்லையக்கா, நான் வேணுமென்று ஒன்றுஞ் சொல்லவில்லையே. நீ தானே முதலில் விபரத்தைக் கேட்டாய். நானும் அது போல கேட்கக்கூடாதா?

தகப்பன்—ஏண்டா சுந்தரம், உன்னை விபரங் கேட்க வேண்டாமென்று ஒருவருஞ் சொல்லவில்லையே. எவ்விஷயத்தையும் நன்றாய் ஆராய்ச்சி செய்து உண்மைகாண வேண்டியது தான். அதற்காகத் தானே கல்வி, கேள்விகளை மனிதர் விரும்புகிறார்.

தாய்—அப்பா சுந்தரம்! நீ சிறு பிள்ளை. இதெல்லாம் விசாரிக்க உனக்கென்ன கவலை? நமது அம்பாளுடைய பெருமை உனக்குத் தெரியாது. நமது வினை தீயதாயிருந்தால் அம்பாள் என் செய்வாள்? நமது வினையை நாம் தானே அனுபவிக்க வேண்டும்.

சுந்தரம்—ஆமம்மா, அதைத் தான் கேட்டுத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன். நாம் செய்த வினையை நாம் அநுபவிக்க வேண்டுமென்றால், அம்மனுக்குப் பிரார்த்தனை செய்து ஆடு, கோழிகளைக் கொலை செய்தால், கொலை செய்வதால் வரும் பாவத்தை நாம் அநுபவிக்க வேண்டி வருமல்லவா? "கொல்லாமை" என்னும் விஷயமாய் எங்கள் உபாத்தியாயர் செய்த பிரசங்கமொன்றில் "கொல்லாமை மேற்கொண்டொழுகுவான் வாழ்நாள் மேற் செல்லாதுயிருண்ணுங் கூற்று" என்னும் தெய்வப்புலவர் திருக்குறளைப் பற்றி அர்த்தஞ் சொல்லியபோது, பிற ஜீவராசிகளைக் கொலை செய்யாது வாழ்வோர்களிடத்தில் பிற ஜீவராசிகளுக்குப் பகையில்லை யாதலாலும், அவ்விதம் வாழ்வோர்க்கு மரணபயமில்லை யாதலாலும், வினை வழிச் சென்று உயிர்கொள்ளும் காலனுக்கு வேலை அங்கில்லை என்று சொன்னார். அந்த ஞாபகம் நீங்கள் அம்மனுக்குப் பலியிட ஆடு, கோழி வாங்க வேண்டுமென்று அய்யாவிடத்தில் கேட்ட போது வந்தது. நீங்களும் நான் செய்த தீவினையென்று சொல்லுகிறீர்கள். இவைகளெல்லாம் என் மனதைக் குழப்புகின்றன. ஆடு, கோழிகளைக் கொல்வது தீவினையல்லவா? அம்மன் பேராலானாலும் சரி, சாமி பேராலானாலும் சரி கொலை, கொலை தானே. இனத்தைப் பிரித்தக் கொலை செய்வதால் வந்த பயன்தான், நமது கிருஷ்ணனும் நம்மை விட்டுப் பிரிந்து கொலையுண்டு போனானென்று எனக்குத் தோன்றுகிறது. நீங்கள் செய்த பிரார்த்தனையை ஆடு, கோழிகளைக் கொல்லாமல், அம்மனிடத்தில் உள்ளன்போடு பக்தி செலுத்தி பாற் பொங்கலிட்டு நிறைவேற்றினாலென்ன? கொலை செய்து தெய்வம் வழி படல் தருமமல்லவென்று உங்களிடத்தில் சொல்லும்படி என் மனதுள்ளே ஒரு சக்தி யிருந்து தூண்டுவது போல் தெரிகிறது. (மயங்கி விழுகிறான்.)

தாய், தகப்பன், சீதை மூவரும் மனம் பதைத்து சுந்தரத்தைத் தேற்றி வைத்துக் கொண்டு, அப்பா சுந்தரம், உன் வாக்கில் பராசக்தியே வந்து முன்னின்று சொல்கிறாளென்று நம்புகிறோம். இது முதல் எவ்வுயிரையும் கொல்லா விரதத்தைக் கைக்கொண்டு உண்மை அன்போடு பராசக்தியை வணங்குகிறோமென்று உறுதி கூறுகிறோமென்று சொல்லி ஆதரவளித்தனர். பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

"பெறுமவற்றுள் யாமறிவதில்லை அறிவறிந்த
மக்கட் பேறல்ல பிற"—திருக்குறள்.

Tamil Heritage Foundation International Digital Library EBook collection